# ஐக்கிய திராவிடம்

விவேகி



T21174

R004F02

சுக வாழ்வு பெற

சிறந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

உங்கள் ஜீவியத்தில்

நீங்களே ரூபாய் 250, 400, 500, 750, 900

பெற்று அனுபவிக்கலாம்.

●

எளிய முறையில் தினசரி ரூ. 0—0—6, 0—1—0, 0—2—0 செலுத்தலாம்.

●

தக்க கமிஷன் அல்லது சம்பளத்தில் வேலை செய்ய ஆங்காங்கு ஏஜண்டுகள் தேவை. விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

விவரங்களுக்கு : ________________________________

ஆல் இந்தியா

நேஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்

தலைமை ஆபீஸ் :

மானேஜிங் டைரக்டர்
ஆல் இந்தியா நேஷனல்
பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்
விருதுநகர்.

சீப் ஏஜன்ஸி ஆபீஸ் :—

V. B. பழனிவேல்
சீப் ஏஜண்டு
20, பஞ்சுக்காரத் தெரு
கும்பகோணம்
(தஞ்சை ஜில்லா)

# ஐக்கிய திராவிடம்

❀

ஆக்கியோன் :

"விவேகி"

❀

வெளியிடுவோர் :

திராவிட கலா நிலையம்

55, முக்தாருனிசா பேகம் தெரு,

மவுண்ட் ரோடு :: சென்னை - 2

முதற் பதிப்பு: 4000
ஜூலை 1947

[பதிப்பு உரிமை உடையது]

விலை அணு 12

செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை, M.S.277—C. 4000

# ஒப்புவிக்கை

## திராவிட நாடு பிரிவினை நாள்

1947 - ம் ஆண்டு, ஜூலை மாதம் ஒன்றும் நாளை திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ-வெ-ரா அவர்களின் கட்டளைப்படி. திராவிட நாட்டுப் பிரிவினை நாளாகத் தமிழகம் முழுவதும் கொண்டாடினர்.

அன்று, தமிழகத்திலுள்ள ஒவ்வொரு உண்மைத் திராவிடன் உள்ளத்திலும் உணர்ச்சி வெள்ளப் பெருக்கெடுத் தோடும் காட்சியை ஊர்வலங்களில் கண்டோம்! பொதுக் கூட்டமெனும் கடலிலே அவைகள் சங்கமமாகியபோது பொங்கி விரிட்டெழுந்த போர் முழக்கங் கேட்டோம்!! இந்திய உபகண்டத்தின் வரலாற்று ஏட்டிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க புரட்சிக்கு ஆரம்ப நாளாகிய அன்றுதான் நாம் 'விரச் சபதம்' புரிந்தோம்!!!

இதோ! அச் சபதம் நமது இருதயங்களில் ஓயாது ஒலித்தலையும் உணர்கின்றோம் :

"திராவிட நாடு தனிச் சுதந்தர நாடாக ஆகும்வரை நாங்கள் கிளர்ச்சி செய்தே தீருவோம்"

ஆம், கிளர்ச்சி! புரட்சி!! போர்!!! ஆரிய ஆதிக்கம் அழியுமளவுக்கு அடங்காப் போர் புரியுந் திராவிட விராங்கனைகளுக்கே ஒப்புவிக்கை யாகிறது இந்நூல்.

இங்ஙனம்,
'விவேகி'

1947, ஜூலை 1

# பொருள் அடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. ஏகாதிபத்திய வெறி | ... | 1 |
| 2. சரித்திரச் சான்றுகள் : | | |
| (1) பூர்வீகர் காலம் | ... | 7 |
| (2) ஆப்கானியர் காலம் | ... | 15 |
| (3) முகலாயர் காலம் | ... | 20 |
| (4) ஐரோப்பியர் காலம் | ... | 25 |
| 3. ஆங்கில ஏகாதிபத்தியம் | ... | 30 |
| 4. முதலாவது புரட்சி | ... | 36 |
| 5. இரண்டாவது புரட்சி | ... | 41 |
| 6. பெரியார் ஈ. வெ. ரா. | ... | 49 |
| 7. திராவிடர் கழகம் | ... | 59 |
| 8. பிரிவினையும் ஐக்கியமும் | ... | 70 |

# ஐக்கிய திராவிடம்

## 1. ஏகாதிபத்திய வெறி

"இந்திய உபகண்டத்தின் மத்திய அரசாங்க ஆதிக்கத் தொடர்பிலிருந்து விடுதலை அடைந்து திராவிட நாட்டில் திராவிட மக்களின் ஐக்கியச் சமதர்மக் குடியரசு ஆட்சியை அமைப்பதற்குரிய திட்டங்களே திராவிடர் கழகத்தின் கொள்கையாகும்."

இந்தியா ஒரு தேசமல்ல! இந்தியா ஒரு உபகண்டம். இதர கண்டங்களில் பல தேசங்கள் இருப்பதேபோல் இந்தியாக் கண்டத்திலும் பற்பல தேசங்கள் இருக்கின்றன. ஆதி காலத்தில் இந்தியாக் கண்டத்தில் ஐம்பத்தாறு தேசங்கள் இருந்தன. அவைகளைக் கிரேக்கர்களும், இரஜபுத்திரர்களும், ஆப்கானியர்களும், முகலாயர்களும், முடிவில் வெள்ளையர்களும் ஒரே தேசமாக்கிவிடத் தீவிரமாக முயன்றனர். எனினும், எத்தகைய வல்லரசாலும், ஏகாதிபத்திய வெறி கொண்ட படைப்பலத்தாலும் இந்திய உபகண்டத்தை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்து நிலைநிறுத்த முடியவேயில்லை. அக்காலத்தில் ஐம்பத்தாறு தேசங்களாக மட்டும் இருந்தவை வெள்ளையரின் விபரீத முயற்சியினால் ஐநூறுக்கு மேற்பட்ட தேசங்கள் (சமஸ்தானங்கள்) ஆகிவிட்டன.

இன்று, இந்திய உபகண்டத்திலுள்ள பல்வேறு தேசங்களின் மக்கள் தத்தம் இனத்தின் பேராலும், ஆங்காங்கு தழுவியுள்ள மதத்தின் பேராலும், தனித்தனியான கலாச்சாரப் பண்பாட்டின் பேராலும், மொழியின் பேராலும் (உள்ளூரப் புத்துயிர் பெற்றுத் தளிர்த்துக்கொண்டிருக்கின்றமையால்) அவரவர்களும் தனித்தனியான அரசுரிமை கோருகின்றனர். மேலும், தனித்தனியான தேசாபிமானிகளையும், கலாபிமானிகளையும் உற்பத்தி செய்யக்கூடிய விதமாகத் தேசாபிமானங்களும், கலா ஞானங்களும், பண்பாடுகளும், இன உணர்ச்சிகளும் அரசியல் கிளர்ச்சிகளாக உருப்பெற்று வலுக்கின்றன.

ஆகவே, மீண்டும் இந்தியாக் கண்டத்தில் பற்பல தனித்தனியான வல்லரசுகள் தோன்றப்போவது நிச்சயமாகிவிட்டது. அசோகரும், அலாவுத்தீன் கில்ஜியும், அக்பரும், ஆங்கிலேயரும் இந்தியாக் கண்டத்தில் ஒரு வலிமை மிக்க ஏகாதிபத்திய ஆட்சியை மத்திய அரசாங்கமாக நிலைநாட்டுவதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் வீணாகிவிட்டன. இன எழுச்சியை மாய்த்துவிடக்கூடிய வலிமை எத்தகைய வல்லரசுக்கும் வாய்க்கவே முடியாது என்பதைத்தான் சரித்திரங்கள் தெளிவு படுத்துகின்றன.

ஆரிய சமாஜம், ஹிந்து மகாசபை முதலிய மத சீர்திருத்தப் பாதுகாப்புப் போர்வைக்குள் மறைந்து கிடந்த ஏகாதிபத்திய சாம்ராச்சிய (அகண்ட ஹிந்துஸ்தான்) வெறிக்கும் சாவு மணி அடித்துச் சவக்குழியும் தோண்டியாகிவிட்டது. ஆனால், இனிமேல் தனித்து இயங்கப்போகும் ஹிந்துஸ்தான் ஆட்சியில் அவ்வெறி மீண்டும் புத்துயிர்

பெறுமல் இருந்தாலொழிய பாக்கிஸ்தானுக்கும் ஹிந்துஸ் தானுக்கும் யுத்தம் நடக்க முடியாது என்று எப்படிக் கூற முடியும்?

பாக்கிஸ்தான் பிரச்னையும் அகண்ட ஹிந்துஸ்தான் பிரச்னையும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதின் பலனே கல்கத்தா, நவகாளிக் கலகங்களாகும் என்றால், பாக்கிஸ்தான் சாம்ராச்சிய ஏகாதிபத்திய வெறியோ! அல்லது ஹிந்துஸ் தான் சாமராச்சிய ஏகாதிபத்திய வெறியோ!! இராணுவ பலத்துடன் ஒன்றோடொன்று மோதிக்கொண்டால் என்ன வாகும் என்ற கேள்வியும் சிந்தனைக்குரியதேயாகும்.

காந்தியார் கூறிய ராம ராச்சியமோ! அல்லது மற்ற வர்கள் கூறிய அகண்ட ஹிந்துஸ்தான் சாம்ராச்சியமோ! ஆங்கில சாமராச்சியத்தைவிட மிகவும் வலிமையோ, இராச தந்திரமோ உடையதாக இருக்க முடியுமா? அப்படிப் பட்ட ஆங்கில ஏகாதிபத்தியமே பாக்கிஸ்தான் பிரச்னையால் தகர்ந்துவிட்டதென்றால், இனி எத்தகைய ஏகாதிபத்தியந் தான் இந்திய உப கண்டத்தில் நிலைக்க முடியும்? உலக அரசியல் அகராதியிலிருந்து சாம்ராச்சியம், ஏகாதிபத்தியம் என்ற பதங்களை ஒழிந்து கொண்டிருக்கும்போது இந்திய உப கண்டத்தில் இருப்பதாவது, நூற்றுண்டுக்குப் பிறகு ஒரு ஏகாதிபத்திய சாம்ராச்சியத்தை நிறுவி விடலாம் என்று கனவிலகூடக் கருத முடியுமா? அதைச் செய்ய வலிமை மிக்கப் பாக்கிஸ்தானுலும் முடியாது; ஹிந்துஸ்தானு லும் முடியாது. ஆனால், இந்திய உபகண்டத்தைச் சதா யுத்தகளமாக வைத்துக்கொண் டிருப்பதென்றால், அது மட்டும் ஓரளவுக்குச் சாத்தியப்படலாம்!

எதிர்காலத்தில், ஏகாதிபத்திய வெறி அறவே ஒழிந்து சமதர்ம ஆட்சி மனப்பான்மை ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் வேரூன்றக்கூடும் என்று நம்புவோமானல் மேற்கூறிய யுத்த பயத்திற்கும் காரணம் இல்லையல்லவா ?

நல்லதோர் மனப்பான்மை நம் இந்திய உபகண்டத்திலுள்ள மக்கள் மனதிலோ ! தலைவர்கள் மனதிலோ ! உதயமாவதற்குக் காலதாமதம் ஏற்படலாம்! காந்தியாரும், காங்கிரஸுமே அதற்குரிய உதாரணங்களாகும். காந்தியாரும், காங்கிரஸும், ஜனுப் ஜின்னுவோடும், முஸ்லிம் லீக்கோடும் ஆரம்பத்திலிருந்தே, அஃதாவது பதினன்கு கோரிக்கை காலத்திலிருந்தே அற்பத்தனமாகவும், பிடிவாதமாகவும் முரண்பட்டுக்கொண்டே வந்தனர். முடிவாகப் பாக்கிஸ்தான் பிரச்னை தோன்றிற்று. இப்பிரச்னையை மற்றெல்லாப் பிரச்னைகளைவிட மிகவும் வன்மையாகவும், கண் மூடித்தனமாகவும் எதிர்த்தனர், அலட்சியப்படுத்தவும் செய்தனர். பாக்கிஸ்தான் பிரிவினையை ஒப்புக்கொள்வதற்கு ஒரு தினத்திற்கு முன்புகூடக் காந்தியார் மூடத்தனமாகக் கடைசி மூச்சுவரையில் பிரிவினையை எதிர்ப்பேன் என்று முழங்கிவிட்டு மறுநாளே பாக்கிஸ்தானுக்கு மண்டியிட்டு ஏற்றுக்கொண்டதோடு மக்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு அறிக்கை விட்டார். இம்மாதிரி வீண் ஜம்பப்போக்காலும், பேச்சாலும் அல்லவா இந்திய உப கண்டத்தின் சுதந்தரப் பிரச்னை இவ்வளவு காலதாமதப் படுத்தப்பட்டுவிட்டது ?

இன்னும், திராவிட நாட்டுப் பிரிவினைக்கும் அதே அலட்சிய மனப்பான்மையும், மூடத்தனமான மறுப்பும், எதிர்ப்பும் காந்தியாரிடமும் காங்கிரஸிடமும் இருந்து

வருமேயானுல், திராவிட நாட்டிலும் நவகாளியும், கல்கத்தாவும் தோன்றித் திராவிடர் ஆரியர் உயிர்களை உறிஞ்சாதா? அப்படிப்பட்ட கோரச் சம்பவங்கள் நடந்த பிறகுதான் திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்னையைக் கவனிக்க வேண்டுமா? இதுதான் காங்கிரஸின் தன்மையாக இருந்தாலும்! பாக்கிஸ்தான் பிரிவினைப் பிரச்னை வெற்றியடைந்தது கண்டாவது புத்தி வரவேண்டாமா? வீணே இரத்தம் சிந்த விடலாமா? என்று சிந்திக்கவேண்டும்.

இந்திய உப கண்டத்தை நவீன ஆயுத பலத்தாலும், இணையற்ற இராச தந்திரத்தாலும் இவ்வளவு காலமாக வலிமையோடு ஆண்டு கொண்டிருந்த வெள்ளையர் வெளி ஏறப்போவது உண்மையானுல், இந்தியாக் கண்டத்திலுள்ள பல்வேறு தனித்தனியான இனங்களின் பிரதிநிதிகளை அழைத்து ஒரு மகாநாடு நடத்தி அவர்கள் கோருவது போலத் தனித்தனியான இன அரசுகளாகப் பிரிவினைகள் செய்து; பிறகு, அகில இந்திய இனங்களின் குடியரசுத் தலைவர்கள் அடங்கிய மற்றொரு மகாநாடும் கூட்டி இந்திய உப கண்டத்தின் நிரந்தர சமாதானத்திற்குப் பங்கம் நேராத வகையில் உடன்படிக்கைகள் நிறைவேற்றி, ஐரோப்பாக் கண்டத்திலுள்ள தேசங்களின் நிலைமையைப் போன்றோ அல்லது அதைக்காட்டிலும் சிறப்பாகவோ விளங்குவதற்குரிய மார்க்கங்களைக் கையாளாவிட்டால் இந்திய உபகண்டத்தில் ஒரு போதும் சமாதானமென்பதே ஏற்பட முடியாது.

என்றைக்கு வெள்ளையர் ஆதிக்கம் ஒழிகிறதோ அன்றைக்கே இந்திய உப கண்டத்தில் மறைந்துகிடக்கும் தேசங்களின் எல்லைகளும் குபீரென்று தோன்றிவிடும்.

பற்பல தேசங்களின் பெயர்களும், அவற்றைப் பாதுகாக்கக் கூடிய இன உணர்ச்சியுள்ள தலைவர்களும், இன எழுச்சி யுற்ற போர் வீரர்களும் உடனே ஆங்காங்கு தோன்றி விடுவர்; தோற்றுவிக்கவும் படுவர். பிறகு, அவர்களை அடக் கும் ஏகாதிபத்திய வெறியர்களும் தோன்றுவர். அதனால், இந்திய உப கண்டத்தில் மூன்றாவது உலக மகாயுத்தமே உதயமாகலாம்! ஆனால், வெள்ளையரின் ஆதிக்கம் ஒழியா விட்டால், இன எழுச்சியே ஏற்படாதென்பதல்ல இதன் கருத்து! இன எழுச்சி ஏற்கனவே ஏற்பட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது; அவ்வளர்ச்சியைத் தடுக்கும் எத் தகைய வல்லரசின் செயலும் மூன்றாவது உலக மகாயுத்தத் திற்கு அடிகோலல் போலாகும் என்றே கூறவேண்டும்.

இதர கண்டங்களிலுள்ள தேசங்கள் எப்படி ஒன்றோ டொன்று யுத்தம் புரிந்துகொண்டே வாழவேண்டிய திருக்கிறதோ! அதுபோலவே இந்தியாக் கண்டத்தில் இனி ஏற்படயிருக்கும், இன அரசுகள் ஒன்றோடொன்று போராடிக்கொண்டுதான் வாழவேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டுப் பிரிட்டிஷார் வெளியேறி விட்டவரைப் போல் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்தா லும் வியப்பொன்றுமில்லை!

வாழ்க்கைக்குரிய பெரிய போராட்டங்களில் யுத்தமும் ஒன்று! யுத்தத்திற்குரிய பொதுவான காரணங்கள் பல இருப்பினும், மன்னர்களைப் பொறுத்தமட்டில் ஓரே ஒரு காரணந்தான் உண்டு. பல தேசங்களின் எல்லைகளை அழிக் கும் ஏகாதிபத்திய சாம்ராச்சிய வெறிதான் அது! அவ் வெறி பிடித்தவன் கண்களுக்கு ஒரு உபகண்டம் மட்டு மல்ல, உலகமே ஒரு தேசமாகவும் அதற்கு அவன் ஒருவனே

சக்கரவர்த்தியாகவும், சர்வாதிகாரியாகவும் இருக்கவேண்டும் என்றே தோன்றும. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான ஏகாதிபத்திய வெறி, கொள்ளைக் கூட்டத் தலைவன் காலம் முதல் காந்தியார் காலம்வரை இந்திய உபகண்டத்தில் நிலவி வந்திருக்கின்றது என்பதை அடுத்த அத்தியாயத்தில் சரித்திரப் பூர்வமாக விளக்குவோம்.

# 2. சரித்திரச் சான்றுகள்

## 1. பூர்வீகர் காலம் :

இந்தியாக் கண்டத்தின் பூர்வீகக்குடிகளாகிய திராவிடர்கள் மிகவும சிறந்த பண்பாடுடையவர்களாகவும், விரிந்த மனப் பான்மையுடையவர்களாகவும், தொழில் துறைகளில் நாகரீகமும், ஆட்சி முறையில் மேன்பாடான குடியரசுத் தன்மையும் வாய்ந்தவர்களாகவும் விளங்கினர் என்றும்;சாதிபேதமே அற்று, பிளவுகளும் அற்று, ஒற்றுமையாக, ஆனல ! தனித் தனிக் கூட்டங்களாகப் பிரிந்து அவ்வப்பிரதேசங்களில் உள்ள தத்தம் தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் கட்டுப்பாடுடையவர்களாக இனிது வாழ்ந்து வந்தனர் என்பதை அறிவிக்கும் எண்ணற்ற சங்க இலக்கியச் சான்றுகளும், சரித்திர ஆதாரங்களும், மொஹஞ்சொதரோ, ஹரப்பா போன்ற மறைந்த நகரங்களில் புதைந்து கிடந்த உண்மைகளும் நல்ல எடுத்துக் காட்டுகளாய் இன்றும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. என்ருலும், இன்னும் மேன்மையான பல உண்மைச் சரித்திரங்களைக் கூறத்தகுந்த முதற் சங்க, இடைச் சங்க கால இலக்கிய ஏடுகள் அகப்படாதவாறு அழிந்தும், அழிக்கப்பட்டும் போயின. ஆகையால், ஆதிகாலத்து நம் மூதாதைகளாகிய திராவிடர்களின் ஒப்பற்ற உன்னதமான பண்பாடு

களும், பகுத்தறிவுக் கோட்பாடுகளும் உலகம் அறியப் பரவி நிலை பெற்றிடாது போயிற்று. அம் மாபெரும் பாதகத்திற் குரிய காரணர்களாய்ப் பழியேற்ற ஆரியர்களே அன்றுமுதல் இன்றுவரை திராவிடர்களின் விரோதிகளாவர்.

அந்தக் காலத்தில், ஆரியர்கள் நாடோடிக் காட்டு மிராண்டிகளாய் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு மத்திய ஆசியா பிரதேசங்களிலிருந்து கைபர் கணவாய் வழியாக இந்தியாக் கண்டத்திற்குள் புகுந்து, சிந்துவும் அதன் ஐந்து உபநதிகளும் பாய்வதால் செழிப்புற்று விளங்கும் பிரதேசங்களில் குடியேறினர்கள். அதன் பிறகு, நாளடைவில் அவர்களின் தொகையும் அதிகரித்தது, மேலும் பல புதிய ஆரியர்கள் கூட்டங் கூட்டமாகவும் வந்து, கிழக்கு நோக்கிச் சென்று கங்கை யமுனைக் கரைகளிலும் குடியேறித் தங்களுக்கெனத் தனித்தனியான இராச்சியங்களை ஏற்படுத்திக் கொண்டு நிலைத்து வாழ ஆரம்பித்து விட்டனர்.

பூர்வீகக் குடிகளாகிய திராவிடர்கள் தங்கள் விரிந்த மனப்பான்மைக்கும், சிறந்த பண்பிற்கும் தகுந்தாற் போல் ஆரியர்கள் ஆங்காங்கு குடியேறுவதையும் அவர்களுக்கெனத் தனித்தனியே இராச்சியங்கள் அமைத்துக் கொள்வதையும் தடுத்து எதிர்க்காததோடு, ஆரியர்கள் அவ்வாறு செய்து கொள்வதற்கு உதவியாகவும் இருந்திருக்கின்றனர்.

ஆனல், ஆரியர்கள் நிலைத்து வலுப்பெறவும், தங்களை வரவேற்று அன்பு காட்டிய திராவிடர்களுடன் திடீரென்று போரிட்டுத் திராவிடர்களின் ஆட்சி முறைகளைச் சிதைத்துச் சின்ன பின்னப்படுத்தி விட்டனர். ஆரியர்களால் சிதைக்கப் பட்ட திராவிடர்கள் பற்பலவாறு பிளவுபட்டு விட்டனர். சிற்

சில திராவிடர்களே ஆரியர்களுக்குக் கட்டுப்படாமல் மலைப் பிரதேசங்களுக்குள் ஓடி ஒளிந்து வாழ்ந்தனர். மற்றும் பலர் ஆரியர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு ஆரியர்களுடைய அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். அத்தகைய திராவிடர் களையே ஆரியர்கள் 'தாசர்கள்' என்று பெயரிட்டு அழைத் திருக்கின்றனர்.

அதற்குப் பிறகு, ஆரிய அரசனான இராமன் வடநாட் டில் ஆரிய இராச்சியத்தைப் பலப்படுத்திக் கொண்டு பெருஞ் சேனையுடன் திராவிட நாட்டின் மீதும் படை எடுத்துச் சென்று திராவிட மன்னர்களையும், மக்களையும் இராட்சசர், அரக்கர், குரங்குகள், கரடிகள் என்றெல்லாம் இழிவாகக் கூறிச் சூழ்ச்சியும், சூதுமே போராக நடத்தி சிற்சில திரா விட இனத்துரோகிகளின் உதவியால் வெற்றி பெற்றுத் திரும்பினான். இச்சம்பவத்தையே திரித்தும், கற்பனைக் கதை புனைந்தும் 'இராமாயணம்' என்று எழுதி வைத்தனர்.

அடுத்தது 'மகா பாரதம்' இதில் சூதும், சூழ்ச்சியும், பொய்யும், பொறாமையும் நிறைந்த ஆரிய அரசர்கள் தங்க ளுக்குள்ளாகவே ஏகாதிபத்திய வெறிகொண்டு ஒருவருக் கொருவர் புரிந்து கொண்ட யுத்தங்களை மிகைப்படுத்தி எழுதி வைத்திருக்கின்றனர்.

அந்தக் காலத்தில் ஆரியர்கள் இந்தியாக் கண்டத்தில் ஏற்படுத்திய தேசங்களுள் முக்கியமானவை குருபாஞ்சாலம், கோசலம், அங்கம், விதேகம், மகதம். இவற்றுள், மகத தேசத்தை ஆண்ட நந்த அரசனை அவனுடைய சேனைத்தலை வனாகிய சந்திரகுப்தன், சாணக்கியன் என்ற ஆரியனின் சூழ்ச்சியினால் துரத்திவிட்டு அரசனாகி, மௌரிய வம்சத்தரசை

நிறுவினான். அவன் மற்ற பிரதேசங்களின் எல்லைகளை அழித்துச் சாணக்கியனுடைய ஆலோசனைப்படி மௌரிய சாம்ராச்சியத்தை ஏற்படுத்தும் முயற்சியிலீடுபட்டான்.

சந்திரகுப்தனுக்குப் பிறகு அவன் முயற்சியைத் தொடர்ந்து நடத்திக் கலிங்க தேசத்தையும் வென்றவன் அசோகன். அசோகனுடைய ஏகாதிபத்திய எல்லை வட மேற்கில் காந்தார தேசமுதல், கிழக்கில் கங்கை நதி முகத்துவாரம் வரையிலும், தெற்கில் மைசூர்தேசம் வரையிலும், பரவியிருந்தது. எனினும் அசோகனுடைய ஏகாதிபத்தியம் பூர்த்தியடையவில்லை. இந்தியாக் கண்டத்தின் மேற்குக் கடற்கரையில் சேரநாடும், தெற்கில் பாண்டியநாடும், அதற்கு வடக்கில் சோழநாடும் அசோகனுடைய ஏகாதிபத்தியத்திற்குக் கட்டுப்படாதவைகளாகவே இருந்தன.

அக்காலத்தில் சேரநாட்டின் தலைநகரம் வஞ்சி, அதன் முக்கிய மன்னன் சேரன்செங்குட்டுவன். பாண்டிய நாட்டின் தலை நகரம் மதுரை, முக்கிய மன்னன் நெடுமாறன்; சோழநாட்டின் தலைநகரம் உறையூர், முக்கிய மன்னன் கரிகால்ச் சோழன்.

மகத சாம்ராச்சியத்தின் சக்கரவர்த்தி அசோகன் இறந்தவுடன், அவனுடைய சாம்ராச்சியமும் தொலைந்தது. கலிங்கர்களும், ஆந்திரர்களும் சுதந்தரம் அடைந்து தனித்தனியான அரசுகள் அமைத்துக்கொண்டனர். ஆனால் அத்தோடு சாம்ராச்சிய, ஏகாதிபத்திய, மனப்பான்மைகள் ஒழிந்து இந்தியாக் கண்டத்திலுள்ள மன்னர்கள் தனித்தனியான அரசுகள் ஏற்படுத்தி ஆட்சி புரிவதை ஒருவருக்கொருவர் அங்கீகரித்து, நிராக்கிரகிப்புக் கொள்கையை நிலைநாட்டிச் சமத்துவ

மான அரசியல் உரிமையுடன் சம பலம் உள்ளவர்களாய் வாழப் பழகியிருப்பார்களே யானால், இதற்குப் பிறகு ஏற்பட்டிருந்த அன்னியர் படை எடுப்புகளையும் சமாளித்திருக்கலாம்! தத்தம் இன அரசுகளையும் இன்றுள்ள உலக வல்லரசுகளுக்குச் சமானமானவைகளாகவும் விளங்கச் செய்திருக்கலாம்!! ஆனால், இவைகளுக்கெல்லாம் இடையூறாக முளைத்தது ஆரியமே அன்றி வேறெதுவும் இல்லை!!!

அக்காலத்து மன்னர்களுக்கு ஆரியர்களுடைய அநாகரீகமான சாத்திரக் கோட்பாடுகளும், துர்ப்போதனைகளுமே கர்வத்தையும், பேராவலையும், பொறாமையையும் உண்டாக்கி 'அஸ்வமேதம்' போன்ற துராக்கிரகிப்பு யாகங்களைக் கையாளவும், அடிக்கடி போர்கள் மூளவும் காரணங்களாய் விளங்கியிருக்கின்றன.

மேலும், ஆரியர்களுடைய மதாச்சாரக் கொடுமைகளைத் தாங்க முடியாமையாலேயே இந்தியாக் கண்டத்திலுள்ள மக்கள் ஆரியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்காகப் பற்பல மதங்களை ஏற்படுத்தவும், பற்பல மதத்தில் சேர்ந்து பிளவுண்டு போகும்படியாகவும் நேர்ந்திருக்கின்றன என்பவையும் இங்கே குறிப்பிடத்தகுந்தனவாகும்.

அசோகனுக்குப் பிறகு தென்னாட்டின் மீதும் படை எடுத்து வந்தவன் சமுத்திர குப்தன். இவனுக்குப் பிறகு, இரண்டாவது சந்திரகுப்தன் என்ற விக்கிரமாதித்தியன் தோன்றி வடநாட்டிலுள்ள அநேக தேசங்களின் எல்லைகளை அழித்தான்; மாளவம் குஜராத், கத்தியவார், பஞ்சாப் முதலிய தேசங்களை மகத தேசத்தோடு சேர்த்துக்கொண்டு ஏகாதிபத்திய வாதியாக விளங்கினான். அவன் இறந்ததும்,

ஹூணர்களின் தாக்குதலால் அந்த ஏகாதிபத்திய அமைப்பும் ஒழிந்து விட்டது.

ஹூணர்கள் ஆரியர்களைப் போலவே மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாக் கண்டத்துக்குள் நுழைந்த கூட்டங்களில் ஒரு பிரிவினர்களாவர். அவர்கள் வடமேற்குப் பிரதேசங்களில் இராச்சியம் ஏற்படுத்திக்கொண்டு வட இந்தியா முழுவதையும் அடிக்கடி யுத்தகளமாக்கிக் கொண்டிருந்தனர்.

அப்போது (கி. பி. 606-ல்) தனேஸ்வரத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய இராச்சியத்தின் மன்னனாக இருந்த ஹர்ஷவர்த்தனன் ஹூணர்களின் படை எடுப்புகளை எல்லாம் எதிர்த்து ஒழித்து அமைதியை நிலை நாட்டினான். ஆனால், அவனும் கன்னோசியைத் தலை நகராகக் கொண்ட ஒரு பெரிய சாம்ராச்சிய ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கருதினவன் ஆகையால், வட இந்தியாவிலுள்ள பல தேசங்களின் எல்லைகளைக் குலைத்து ஒரே தேசமாக்கினான், பிறகு தக்காணத்தின் மீதும் படை எடுத்து வந்து நருமதை நதிக்கரையில், சாளுக்கிய அரசனான இரண்டாவது புலிகேசியினால் தோற்கடிக்கப்பட்டான். அத்தோடு ஹர்ஷனுடைய ஏகாதிபத்திய வெறியும் ஒழிந்தது.

வட இந்தியாவின் மீது படை எடுத்து வந்த பல்வேறு இனங்களின் சந்ததிகளைத்தான் இராஜபுத்திரர்கள் என்று கூறுவர். அத்தகைய இராஜபுத்திரர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களேதான் சாளுக்கியர்களும். சாளுக்கியர்கள் தக்காணத்தின் மேற்குக் கரையில் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு ஒரு இராச்சியம் ஏற்படுத்தி வாழ்ந்து வந்தனர்,

அதன் முக்கிய அரசனே தான் மேற்கூறிய இரண்டாவது புலிகேசி என்பவன்.

ஹர்ஷன் வடநாட்டில் ஏகாதிபத்திய அமைப்புப் போர் புரிந்து கொண்டிருந்த சமயம், இரண்டாவது புலிகேசி தென்னாட்டிலுள்ள தேசங்களின் மீது ஏகாதிபத்தியம் செலுத்துவதற்காக முதலில் பல்லவர்களோடு போர் புரியக் கிளம்பி வந்தான்.

பல்லவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்ட பெரியதோர் இராச்சியத்தை ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்திருந்த திராவிடர்களில் ஒரு பிரிவினராவர். அவர்களின் சக்கரவர்த்தியாக விளங்கிய மஹேந்திரவர்மனைத்தான் இரண்டாவது புலிகேசி யுத்தத்தில் வென்றான். ஆனால், மஹேந்திர வர்மனுடைய மகன் நரசிம்மவர்மன் அரசனானதும் வாதாபி மீது படை எடுத்துச் சென்று இரண்டாவது புலிகேசியைத் தோற்கடித்துச் சாளுக்கிய சாம்ராச்சியக் கனவைக் குலைத்தான்.

இதற்கிடையில் ஆரியம் திராவிட நாட்டிலும் மிகவும் துரிதமாகப் பரவியிருந்தது. எனவே, ஆரியக் கொள்கைகளுக்கு அடிமையாகிய மூவேந்தர்களுக்குங்கூட ஏகாதிபத்திய வெறி உண்டாகி விட்டது. அதனால், அவர்களுக்குள்ளேயே அடிக்கடி ஒருவர் நாட்டை ஒருவர் ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் போர் புரிந்து கொண்டிருந்தனர்.

கி. பி. 985 முதல் சோழ நாட்டரசன் ராஜராஜசோழனுடைய படை பலம் ஓங்கிற்று; பாண்டியனையும், சேரனையும் யுத்தத்தில் வென்றான். லட்சத்தீவுகளையும், கிழக்கிந்தியத்

தீவுகளையும் ஆக்கிரகித்துக்கொண்டு தெற்குப் பிரதேசம் முழுவதிலும் சோழ சாம்ராச்சியத்தை நிறுவமுயன்றான். இவனுக்குப் பிறகு அரசனாக ராஜேந்திர சோழன் தோன்றிக் கங்கை வரைப் படை எடுத்துச் சென்று பால வம்சத்தரசர்களை வென்று கங்கை கொண்ட சோழன் என்ற பட்டமும் பெற்றான். மற்றொரு முக்கியமான மன்னன் குலோத்துங்கச் சோழன். இவன் காலத்தில் கீழச்சாளுக்கிய நாடும் சோழ நாட்டுடன் சேர்க்கபபட்டிருந்தது. இவன் கலிங்க தேசத்தையும் வென்று ஆதிக்கம் புரிந்தான். கடைசியாக பனிரெண்டாவது நூற்றாண்டில் பாண்டிய நாட்டரசன் சுந்தர பாண்டியன் படைபலம் உண்டாக்கிக் கொண்டு சோழ சாம்ராச்சிய ஏகாதிபத்தியத்தைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தியதோடு தஞ்சாவூரையும் கைப்பற்றிக்கொண்டான்.

சோழர்களும், பாண்டியர்களும் அடிக்கடி சேரநாட்டைத் தாககிக் கொண்டிருந்தமையால், சேரர்களால் எந்தக் காலத்திலும் பலம் பெற்றிருக்க முடியாமல் போயிற்று. ஆகவே, ஆரியர்களால் சாம்ராச்சிய ஏகாதிபத்திய வெறியும், மௌட்டீகக் கொள்கைகளும் புகுத்தப்பட்ட திராவிட மன்னர்களாகிய மூவேந்தர்களும், பல்லவர்களும், ஆந்திரர்களும், கலிங்கர்களும் சதா ஒருவரோடொருவர் போராடிப் போராடிப் பலவீனர்களாகிப் பாழ் அடைந்துவிட்டனர் என்றே சரித்திரம் கூறுகின்றது.

திராவிட நாட்டு மன்னர்களைப் போலவே, வடநாட்டிலும் ஹர்ஷனுக்குப் பிறகு இரஜபுத்திரர்கள் ஆரியர்களின் கொள்கையைத் தழுவியமையால் ஏகாதிபத்திய வெறியும், மூடக்கொள்கையும் உடையவர்களாய் ஒருவரை யொருவர்

அடக்கி ஆதிக்கம் பெறுவதற்காகச் சதாயுத்தம் செய்து கொண்டிருந்தனர்! இதனுல், ஏகாதிபத்திய வெறியூட்டும் சுலோகங்களேயும், அஸ்வமேத யாகங்களேயும் வேதவாக்கு களாகப் பரப்பி மன்னர்களிடையே குரோதத்தை வளர்த்துக் கொண்டிருந்த ஆரியர்களுக்கு மட்டுமே மிகவும் கொண்டாட்டமாக இருந்தது.

அந்தக் காலத்திலே ஆரியம் இந்திய உபகண்டம் முழுவதும் தலைவிரி கோலமாகத் தாண்டவமாடிற்று எங்கு பார்த்தாலும் மடங்களும், ஆலயங்களும் கட்டுவதிலேயே மன்னர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர். பலவிதமான யாகங்களுக்கும், தேர் திருவிழா முதலிய களியாட்டங்களுக்கும், மௌட்டீகக் கூத்துகளுக்கும் குறைவே இல்லை. இதில் ஒரு வேடிக்கை என்னவென்ருல்! ஒருவரோ டொருவர் தீராத பகைகொண்டு போராடிக் கொண்டிந்த இரஜபுத்திர மன்னர்களும், திராவிடமன்னர்களுப், யுத்தங்களுக்கெல்லாம் மூலகாரணம் ஆரியர்களுடைய 'அஸ்வமேத யாகமே' என்பதை அறியாததோடு அந்த யாகத்தைச் செய்து வைக்கும் ஆரியர்களின் காலடியில் எல்லா மன்னர்களும் ஒரே விதமாகச் சரணுகதி அடைந்து கிடந்தனரே! என்பதுதான்.

## 2. ஆப்கானியர் காலம்

இந்திய உபகண்டத்திலுள்ள பற்பல தேசங்களின் மக்களும், மன்னர்களும் மதத்தின் பேரால் ஆரியத்திற்கு அடிமைப்பட்டு, ஆரியர்களின் அடிவருடிகளாய் விளங்கிய காலத்தில் தான், ஆப்கானி தேசத்தரசன் கஜினிமுகமதின் ஒற்றன் வட இந்தியப் பிரதேசங்களைப்பற்றி உளவறிந்து போகவந்தான். மன்னர்களிடம் மூடத்தனத்தையும், மக்களிடம்

அடிமைத்தனத்தையும், சோமநாதபுர ஆலயத்துள் திரண்ட தனத்தையும் கண்டான். உடனே அவைகளைக் கஜினிக்கு அறிவித்தான். கஜினி 25000 சைன்யங்களுடன் புறப்பட்டு ஆலயத்தில் உள்ள திரண்ட தனக் குவியலகளைக் கொள்ளையடிக்கப்பல தடவைகள் முயற்சி செய்திருக்கின்றான். கடைசியாக மிகவும் தீவிரமான தாக்குதலை நடத்துவதற்கு ஆயத்தமானான்.

அப்போது, கத்தியவாரை ஆண்டு கொண்டிருந்த மன்னனிடம் $4\frac{1}{2}$லட்சம் சைன்னியங்களிருந்தன எனினும் அவைகள் கஜினியின் சிறிய படையை எதிர்த்துத் துரத்துவதற்குக் கூடப் பயன்படாதவாறு ஆரியக் குருக்கள் செய்து விட்டனர்.

ஆரியர்கள் அந்தச் சமயத்திலும், மன்னன் நிதியை அபகரிக்கவே திட்டம் தீட்டினர்! முட்டாள் மன்னன் வழக்கம் போல் ஆரியர் பாதத்தில் சரணடைந்தான்! ஆரியர்களின் ஆலோசனைப்படி 1008 யாகங்கள் நடத்தினன். அநேக ஆயிரம் பார்ப்பனர்கள் அந்த யாகங்களின் பேரால் மன்னனின் பொக்கிசத்தையும், தானியக் களஞ்சியங்களையும், ஆடை ஆபரணங்களையும் கொள்ளை கொண்டனர்.

கஜினியின் ஒற்றன் அத்தகைய அலங்கோலங்களை எல்லாம் கண்டறிந்து உடனுக்குடன் கஜினிக்கு உளவு அனுப்பிக் கொண்டே இருந்தான்.

'நெருப்பெரியும் குழிகளையும், நெய், கோதுமை முதலிய தானியங்களை அக்குழிகளில கொட்டப்படுவதையும் அவைகளைச் சுற்றிலும் அந்தணர் சூழ்ந்திருந்து மந்திரம்

செபிப்பதையும் தவிர அங்கே நம்மை எதிர்த்துப் போராடும் சைன்னிய நடவடிக்கைகள் ஏதுங்கிடையாது. ஊரெல்லாம் வெறும் புகைமயமாக இருக்கிறது.' என்ற விவரங்களை அறிந்த கஜினிக்கு எவ்வளவு பெரிய கொண்டாட்டம் பிறந்திருக்கும்? அம் முழு மூடர்களின் செய்கைகளை நினைத்து நகைத்து விட்டல்லவா சோமநாதபுர ஆலயத்தை முற்றுகையிட்டிருப்பான்!

இந்தியாவிலுள்ள மன்னர்கள் எல்லோரையும் ஆரியர் தமது மூடத்தனத்திற்கு மண்டியிடச் செய்ததே போல் கஜினியையும் வசப்படுத்தச் சோமநாதபுரக் குருக்கள் முத்துப் பல்லக்கைச் சிங்காரித்துத் தாசிகளையும் சீடர்களையும் அனுப்பிப் பார்த்து ஏமாற்றம் அடைந்து விட்டனர்.

பிறகு, அந்த ஆரியக் குருக்கள் சோமநாதபுரச் சிவபெருமான் சுவாமிக்கு எதிரில் ஐம்பது லட்சம் ரூபாய்கள் மதிப்புடைய வியாசபீடம் அமைத்து அதில் கஜினி முகமதை அமரச் செய்து சுவாமியையும் கஜினியையும் போற்றி வணங்கி "ஓ இராஜாதி இராஜனே! தங்களின் நேர்மையான ஆட்சியன்றோ பிராமணர்களாகிய எங்களைக் காப்பாற்றுவது. விஷ்ணு ப்ருதிபதியே! விஷ்ணுவல்லாதவன் அரசன் அன்றென எங்கள் வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் எங்கள் விஷ்ணு அவதாரம்; தங்களுடைய பிராமணர்களாகிய எங்களுக்கு எவ்வித இடையூறும் செய்யலாகாது. மூன்று கோடி ரூபாய்கள் தங்கள் பாதத்தில் காணிக்கையாகச் செலுத்துகிறோம் என்றார்கள்." அதற்கெல்லாம் கஜினி இணங்காது, "பகுத்தறிவற்ற பாமர மக்களையும், மன்னர்களையும் ஏமாற்றிப் பணத்தையும், மானத்தையும் பறிக்கும் பார்ப்பனக் குருக்களே! நீங்கள் மக்களு

டைய துரோகிகள்! பசிக்குதவும் உணவுப் பொருள்களை அநியாயமாக அக்கினியில் போட்டு எரித்து அத்தீயையும் கற்களையும் வணங்கும் நீங்கள் கடவுளுக்கும் துரோகிகளே யாவீர்கள்! உங்களைத் தண்டித்தே தீரவேண்டும்." என்று கோபாவேசமாகக் கூறிச் சிவலிங்கத்தை உடைத்து அதி லுள்ள இரத்தினங்களையும், இருபது கோடி ரூபாய்கள் மதிப்புள்ள நகைகள், பட்டாடைகள், இரத்தினக் கம்பளங் கள் எல்லாவற்றையும் வாரிச்சுருட்டி ஒட்டகங்களில் போட் டுக்கொண்டு, ஆயிரம் பெண்களையும், ஐயாயிரம் ஆண்களை யும் சிறைப் பிடித்துக்கொண்டு போய்விட்டான்.

பணம் கொடுத்தும் இச்சகம் பேசியும் கஜினியை அனுப்பிவிடலாம்! பிறகு யாகங்களும், பிராமணர் பூசை களும், தானதருமங்களுமேதான் கஜினியைப் போகச்செய்து விட்டது என்று மன்னர்களிடமும், மக்களிடமும் பிரச் சாரம் செய்து இன்னும் அதிகப் பேரும் புகழும் பெறலாம் என்று எண்ணிய ஆரியக் குருக்களின் கபடவேலை கஜினி யிடம் பலிக்கவே இல்லை. கஜினியைப்போல் திராவிட மன்னர்களும் இரஜபுத்திர மன்னர்களும் ஆரியர்களின் சூழ்ச்சியை அறிந்து அவற்றை அழித்து வெற்றிகொண்டிருந் தால், இந்திய உப கண்டத்தில் வேறு எக்காரணத்தைக் கொண்டேனும் அன்னியர்கள் ஆட்சி ஏற்பட்டிருக்க முடியுமா?

கஜினியும் இந்தியாக் கண்டத்தில் தனது ஏகாதிபத்தி யத்தைச் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் வர வில்லை. இதிலிருந்து, மூடர்களை முரடன் கொள்ளையிட் டான் என்பதுதான் நமக்கு விளங்கக்கூடிய உண்மையென லாம்!

கஜினிக்குப் பிறகு, இராஜ புத்திரர்களின் பிளவைப் பயன் படுத்திக்கொண்டு இராச்சியம் அமைக்கும் நோக்கத்துடன் இரண்டாவது தடவையாக முகமத் கோரி படை எடுத்து வந்தான். யுத்தத்தில் பிருதிவிராஜன் தோற்றான். டில்லியும், அஜ்மீரும், முகமத் கோரி வசமாயிற்று! பிறகு ஜெய சந்திரனையும் தோற்கடித்து கன்னோசியையும் கைப்பற்றிக் கொண்டான், காசியையும் வென்றான்; முகமத் கோரியின் பிரதி நிதிகளான குத்புதீன் என்பவன் குவாலியரையும், முகமத் பக்தியார் என்பவன் பால வம்சத்தரசர்களையும் வென்று பீஹாரையும், சேனர்களை வென்று வங்காளத்தையும் கைப்பற்றிக் கோரி இராச்சியத்துடன் சேர்த்தான். இவ்வாறு வட இந்தியாவிலுள்ள இதர எல்லா தேசங்களின் எல்லைகளையும் குலைத்து முகமத் கோரி முஸ்லிம் சாம்ராச்சியத்தை நிறுவினான். இராஜ புத்திரர்களோ! இராஜபுதனப் பாலை வனத்திற்குச் சென்று அரவல்லி மலையின் இருபுறங்களிலும் புதிய இராச்சியங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

முகமத்கோரி இறந்த பிறகு, குத்புதீன் அரசனாகி முஸ்லிம் சாம்ராச்சியத்தை ஆட்சி புரிந்தான் அவனுக்குப் பிறகு சில அடிமை வம்சத்தரசர்கள் அச் சாம்ராச்சியத்தை மங்கோலியர் படை எடுப்புகளினால் சிதைந்து போய் விடாமல் பாதுகாத்திருக்கின்றனர். பிறகு, கில்ஜி வம்சத்தரசன் அலாவுதீன் கில்ஜி பட்டத்திற்கு வந்ததும் குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றினான். இராஜபுதனத்தில் முக்கியமான மேவாரின்மீது படை எடுத்து அதன் தலை நகரான சித்தூரையும் முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். அதற்கப்பால்; அவன் தனது சேனைத்தலைவனாகிய மாலிக்கப்பூரைத்

தக்காணத்திற்கும், திராவிட நாட்டிற்கும் அனுப்பி அங்குள்ள தனித்தனித் தேசங்களின் மன்னர்களை வென்று அவரவர் தேசங்களின் எல்லைகளைக் குலைத்து அசோகனைக் காட்டிலும் பெரிய ஏகாதிபத்திய சாம்ராச்சியத்தை நிறுவும்படியாகச் செய்துவிட்டான்.

அலாவுத்தீனுடைய சாம்ராச்சியம் சற்றேறக்குறைய இந்திய உப கண்டம் முழுவதும் பரவி இருந்ததெனலாம்! தேவகிரியில் ஆண்ட யாதவர்களும், வாரங்கலில் ஆண்ட காகதீயர்களும், மைசூரில் ஆண்ட ஹாய்சாலர்களும், மதுரையில் ஆண்ட பாண்டியர்களுங்கூடக் கப்பங் கட்டினர்.

கில்ஜி வம்சத்திற்குப் பிறகு, துக்ளக் வம்சத்தரசர்கள் அப்பெரிய சாம்ராச்சியத்தைப் பரிபாலனம் புரிந்தனர். கி. பி. 1398-ஆம் ஆண்டில் துருக்கியர்களின் தலைவனாகிய தைமூர் டில்லிமீது படை எடுத்து வந்தபோது துக்ளக் வம்சத்து சுல்தான் அவனை எதிர்க்க முடியாமல் ஓடிப்போய் விட்டான். அன்றோடு ஆப்கானியர்கள் அமைத்த முஸ்லிம் சாம்ராச்சியமும் சிதைந்து சின்னா பின்னமாகிவிட்டது.

### 3. முகலாயர் காலம்:

அதன் பிறகு, கி. பி. 1526-ல் முதலாவது பானிபட் யுத்தத்தில் வெற்றியடைந்த பாபர் டில்லியில் முகலாயர் இராச்சியத்தை நிறுவினான். அவன் வங்காளத்திலும், பீஹாரிலும் இருந்த ஆப்கானியர்களுடனும், இராஜபுதனத்திலிருந்த இரஜபுத்திரர்களுடனும் யுத்தம் செய்து வெற்றி பெற்றான்.

முகலாய வம்சத்தரசர்களில் முக்கியமானவன் அக்பர் சக்கரவர்த்திதான். அக்பருடைய ஏகாதிபத்திய எல்லை

வடமேற்கில் காபூல் முதல், காந்தாரம், காஸ்மீரம், முதலிய தேசங்களின் எல்லைகளை உள்ளடக்கியதாகவும், கிழக்கில் கங்கை முகத்துவாரம் வரையிலும், தெற்கில் ஆமத் நகரம் வரையிலும் பரவியிருந்தது.

அக்பர் முதலில் தன் இனத்தாராலும், ஹஸ்பெக்குகளாலும் ஏற்பட்ட புரட்சிகளை எல்லாம் அடக்கினான். பிறகு, மாளவம் முதலிய தேசங்களின் சுதந்தரங்களை அழித்துத் தனது ஏகாதிபத்தியத்திற் குட்படுத்தினான். யாருடைய ஏகாதிபத்தியத்திற்கும் அடங்காமல் தனியரசுகளாக விளங்கிய இராஜபுதனத்திலுள்ள இரஜபுத்திர தேசங்களின் மீதும் படை எடுத்துச்சென்று அவைகளின் சுதந்தரங்களை ஒழித்துத் தனது ஏகாதிபத்தியத்துடன் இணைத்துக் கொண்டான். பிறகு, குஜராத், வங்காளம், பீஹார், ஒரிசா முதலிய தனித்தனி இராச்சியங்களின் எல்லைகளையும், காபூல், காந்தாரம், சிந்து, காஸ்மீர் முதலிய தனித்தனி இராச்சியங்களின் எல்லைகளையும் குலைத்து அசோகனைப்போலும், அலாவுத்தீன் கில்ஜியைப்போலும் ஓர் பெரிய சாம்ராச்சிய ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டிவிட முயற்சித்தான். அதனால் அவன் தக்காணத்தின் மீதும் படை எடுத்துவந்து முதலில் காண்டேஷ் நாட்டு அரசனைக் கீழ்படியச் செய்தான். பிறகு ஆமத் நகரையும் முற்றுகை இட்டான்.

ஆமத் நகரை அப்பொழுது ஆட்சி செய்தவள் ஓர் பெண்ணே! ஆனால், பேதையுமல்ல!! கோழையுமல்ல!!! அவள் பெயர் சாந்த்பீபி. அவள் அக்பரின் படையை எதிர்த்து மிகவும் தைரியமாகப் போராடும்படி தனது படையை ஊக்கினாள், வெகு மும்முரமான போர் நடந்தது. அப்போரில் அக்பருடைய படையே பின் வாங்கிற்று. பிறகு

சமாதானம் நடந்தது, அதன்படி அரசி சாந்த்பீபி தனது இராச்சியத்திலுள்ள பேரரரை அக்பருடைய ஏகாதிபத்திய வெறிக்குப் பலியிடச் சம்மதித்தாள். ஆனால், அரசியின் குடிகள் அதை ஒப்புக்கொள்ளாததால் மீண்டும் யுத்தமே நடந்தது. அந்தச் சமயத்தில் அக்பரே யுத்த களத்திற்குச் சென்று தனது பெரும்படையை ஊக்கினான். அஞ்சா நெஞ்சங்கொண்ட அரசியாம் சாந்த்பீபி கொல்லப்பட்டாள். முடிவில் ஆமத் நகரம் முழுவதுமே அக்பரின் ஏகாதிபத்திய வெறிக்குப் பலியாகிற்று.

அதன் பிறகு, பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களும், அக்பருக்குக் கீழ்ப்படிந்து விட்டனர். இதனால் அக்பருடைய கனவும் ஓரளவுக்குப் பலித்துவிட்டது. அக்பருக்குப் பிறகு சில முகலாயர்கள் அச்சாம்ராச்சியத்தைப் பாதுகாக்கும் போரிலீடுபட்டிருந்தனர். கடைசியாக ஔரங்கசிப் ஆட்சியின்போது தக்காண மன்னர்களும், மகாராஷ்டிரர்களும் கிளர்த்தெழுந்து புரட்சி செய்து முகலாய சாம்ராச்சியத்தையும் சிதைத்துவிட்டனர்.

மகாராஷ்டிரர்கள் இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் சாதாரணப் பயிர்த்தொழில் செய்துகொண்டு வாழ்ந்துவந்தனர். இவர்கள் பழைய ராஷ்டிர கூடர்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள். 17-வது நூற்றாண்டில், இவர்களிடையே சிறந்த தலைவனாகச் சிவாஜி தோன்றினான். அவனேதான் இன எழுச்சிப் போர்முரசு கொட்டிய மகாராஷ்டிரத் தலைவர்களில் முதல்வனுமாவான். முகலாயர் ஏகாதிபத்தியத்தை ஒழித்துத் தனது பிரதேசத்தில் தனியரசு நிறுவும் கொள்கையை வளரச் செய்தவனும், வலிமை மிக்கதோர் புரட்சி இயக்கத்தை ஏற்படுத்தி அதில்

மிகவும் தீவிரமான ஐக்கிய முன்னணிப் படையை அமைத்துச் சுதந்தரப் போர் புரிந்த மகாவீரனுமாவான்.

சிவாஜி ஆரம்பித்த புரட்சி நாளுக்குநாள் வளர்ச்சி அடைந்தமையால், முகலாய சாம்ராச்சியமே நிலைகுலைய ஆரம்பித்துவிட்டது. சிவாஜி அமைத்த படையும் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி ஒரு சிறிய யுத்தத்தைச் சமாளித்து எதிர்த்து வெற்றி பெறும் ஆற்றலை அடைந்து விட்டது. இதனால் சிவாஜி முகலாயர் சேனையை எதிர்த்துத் துரத்திவிட்டுப் பீஜப்பூரைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. ஆனால், சிவாஜி பீஜப்பூர் அரசனாக முடிசூட்டிக் கொள்ளமுடியவில்லை! முகலாய சாம்ராச்சிய ஏகாதிபத்திய வெறி படைத்த சேனைகளை வென்றுவிட்டதால் பீஜப்பூர் அரசனாக சிவாஜி முடிசூட்டிக் கொள்வதை முகலாயர்கள்கூடத் தடுக்க முடியவில்லை என்பது உண்மையேதான்! ஆனால்! சிவாஜியை முடி சூட்டி அரசனாகக் கூடாது என்று தடுத்தது ஆயுத பலமல்ல; அறியாமையின் பலம். ஆம்! ஆரியர்களேதான் அப்படித் துணிந்து தடுத்தனர்! 'சிவாஜி சத்திரியனல்ல ஆகையினால், அவன் அரசனாகும் உரிமை அற்றவன். எனவே, சிவாஜிக்கு முடிசூட்டக்கூடாது என்று ஆரியக் குருக்கள் கூறினர். ஔரங்கசீப்பின் கொடிய ஆயுதங்களைத் தாங்கிய பெரும் படைகளையும், பீரங்கிப் படைகளையும் துச்சமாக மதித்து வீராவேசத்துடன் போராடிய மகாவீரன் சிவாஜி! தருப்பைப் புல்தாங்கிகளாகிய ஆரியர்களுடைய வர்ணச்சாரக் கொள்கையின் முன்னால் நிமிர்ந்து நிற்க முடியாதவனாய் மனங்கலங்கி மண்டியிட்டுப் பணிந்து விட்டான்.

ஆரியர்களுக்கு எப்பொழுதும் பொருள்மீதே கண்ணுங் கருத்தும் இருந்து வருவதாலும், மண்டியிட்ட மன்

னர்களைச் சுரண்டிச் சுரண்டிப் பழக்கப்பட்டிருந்தவர்களாகையாலும் சிவாஜியிடத்திலும் தங்கள் சுரண்டல் திட்டத்தைக் கூறினர். சிவாஜியும் அதற்கு இணங்கினன். உடனே சிவாஜியின் எடைக்கு எடை பொன் நிறுத்து ஆரியர்களின் குருவாகிய கங்குப்பட்டருக்குக் காணிக்கையாகக் கொடுத்துத் தன்னைச் சத்திரியனாக ஆக்கிக் கொண்ட பிறகுதான் சிவாஜி மகாராஷ்டிர அரசனாக முடிசூட்டிக் கொள்ள முடிந்தது.

சிவாஜியின் மரணத்திற்குப் பிறகு, சாம்பாஜி அரசனானன். ஒளரங்கசீப் பீஜப்பூர், கோல்கொண்டாமீது மறுபடியும் படை எடுத்துச் சென்று சாம்பாஜியைச் சிறைப் பிடித்துக் கொன்று விட்டான்.

சாம்பாஜியின் மகன் ஷாஹுவை ஆக்ராவுக்குக் கொண்டுபோய் அங்குள்ள சிறையில் அடைத்து விட்டான். பிறகு, ராஜாராம் மகாராஷ்டிரர்களின் அரசனாக வந்த போதும், அவருக்குப் பின் தாராபாய் அரசியாக வந்த போதும் முகலாயர்களுடன் போராடித் தனி அரசு நிறுவுவதற்காகத் தீவிர முயற்சிகள் செய்திருக்கின்றனர்.

கடைசியாகச் சாம்பாஜியின் மகன் சாஹு கி. பி. 1708-ல் ஆக்ராச் சிறையிலிருந்து விடுதலையாகி வந்தான். அவன் சிறு வயது முதல் முகலாயர் சிறைக்குள் அடைப்பட்டிருந்தவனாதலால் இராச்சிய பரிபாலனம் புரியும் திறமை அற்றவனாக யிருந்தான். எனவே, அவனுடைய மந்திரிகளில் ஒருவனாக நியமிக்கப்பட்டிருந்த பீஷ்வா என்னும் ஆரியன் கொஞ்சம் கொஞ்சமாக இராச்சியாதிகாரங்களைக் கவர்ந்துகொண்டே வந்து கடைசியாக ஆரியர்களே மகா

ராஷ்டிர மன்னர்களாக ஆகுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து முடித்துவிட்டான்.

கி. பி. 1714-முதல் 20-வரை பாலாஜி விஸ்வனாத் பீஷ்வா என்ற ஆரியனும், 1720- முதல் 40-வரை பாஜி ராவ் பீஷ்வா என்ற ஆரியனும், 1740 முதல் 61-வரையில் பாலாஜிபாஜிராவ் பீஷ்வா என்ற ஆரியனும் ஆட்சி செய்திருக்கின்றனர்.

இவர்களில் பாலாஜிபாஜிராவ் பீஷ்வா என்ற கடைசி ஆரியன் உள்ளத்தில் ஆரிய சாம்ராச்சியத்தை எப்படியாவது ஏற்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் உதித்துவிட்டது. எனவே, கி. பி. 1761-ல் மூன்றாவது பானிபட் யுத்தம் நடந்தது. அதில் பீஷ்வா பாலாஜிபாஜி ராவின் சேனைத் தலைவர்களான ரகோபா, சதாசிவ ராவ் முதலியவர்கள், ஆப்கானிஸ்தானத்து அஹமத்ஷா அப்தாலிபின் சேனையை எதிர்த்துப் போராடுவதற்காகத் தமது சேனைகளுக்குத் தலைமை வகித்துச் சென்றனர். எனினும் யுத்தத்தில் மகாராஷ்டிரர்களே தோல்வியுற்றனர். தோல்வியடைந்த செய்தியைக் கேட்டவுடனேயே பாலாஜிபாஜி ராவ் பீஷ்வா இறந்துபோனான். அவனோடு அவனுடைய ஆரிய சாம்ராச்சியக் கனவும் தொலைந்தது. முகலாய சாம்ராச்சிய ஏகாதிபத்திய அமைப்பும் அடியோடு அழிந்தது. ஆகவே, தேசங்களெங்கும் புரட்சியும் கிளர்ச்சியும், கலகமும் வலுத்து ஏகக் குழப்பமாகி விட்டது.

### 4. ஐரோப்பியர் காலம்:

அந்தச் சமயத்தில்தான் ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாக் கண்டத்திற்குள் வியாபாரம் செய்கிற நோக்கத்

துடன் கடல் மார்க்கமாக வழி கண்டுபிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தனர். முதன் முதல் போர்த்துக்கேசியரும், பிறகு டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், கடைசியாகப் பிரஞ்சுக்காரர்களும் வந்தனர்.

வாஸ்கோடிகாமா என்ற போர்த்துக்கேசிய கப்பல் தலைவனே முதலில் கி. பி. 1498-ம் ஆண்டில் இந்தியாக் கண்டத்தின் மேற்குக் கரையில் உள்ள கள்ளிக்கோட்டை என்னும் துறைமுகத்தில் வந்திறங்கினன்.

போர்த்துக்கேசியர்கள் வருவதற்கு முன்பே அங்கு தரை மார்க்கமாக வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த அரேபிய வியாபாரிகளுடன் போர்த்துக்கேசிய வியாபாரிகள் போட்டியிட்டனர். அத்தகைய வியாபாரப் போட்டியின் காரணமாக ஏற்பட்ட சண்டைகளில் அரேபியரையும், ஆப்ரிக்காவின் கீழ் கரையிலிருந்த இஸ்லாமிய வியாபாரிகளையும், எகிப்து, குஜராத்து தேசங்களின் சுல்தான்களுடைய கடற்படைகளையும், போர்த்துக்கேசியரின் முதல் இராசப் பிரதிநிதியாகிய ஆல்மெய்டா என்பவன் அழித்து நாசம் செய்து விட்டுப் போர்த்துக்கேசியர் கடல் ஆதிக்கத்தை (Blue Water Policy) நிலை நாட்டினன். இவனுக்குப் பிறகு வந்த ஆல்புகர்க் என்பவன் கோவாவைக் கைப்பற்றி அங்கு போர்த்துக்கேசியர் ஆட்சியை நிலை நாட்டிவிட்டான். பிறகு, பாரசீக வளைகுடாவில் ஆர்மஸையும் கிழக்கில் மலாக்காவையும் கைப்பற்றிக் கொண்டதோடு விஜயநகரத்தரசர்களோடும் உடன்படிக்கை செய்து கொண்டு வியாபாரத்தையும் விருத்தி செய்தான்.

கடைசியில் போர்ச்சுகல் ஸ்பெயினேடு இணைக்கப் பட்டு விட்டதால் ஸ்பெயின் தேசத்தவர்கள் அமெரிக்கா

விலுள்ள தங்கள் குடியேற்ற நாடுகளைக் கவனித்தார்களே யொழிய இந்திய விவகாரங்களில் தலையிடவில்லை. ஆதலால், இந்தியாவில் அவர்கள் புரிந்த வியாபாரமும் ஒழிந்தது. இராச்சிய விரிவும் கோவா, டையூ, டாமனோடு நின்றது.

போர்த்துக்கேசியர்களுக்குப் பிறகு வந்தவர்கள் டச்சுக்காரர்கள் இவர்களுடைய முக்கிய நோக்கம் வாசனைத் திரவியங்களை வியாபாரம் செய்வதுதான். அவைகள் கிழக்கிந்தியத் தீவுகளில்தான் அதிகம் கிடைத்தன. ஆதலால், அவர்கள் கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டதோடு இந்திய விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்திக் கொண்டனர்.

டச்சுக்காரர்களுக்குப் பிறகு, ஆங்கிலேயர்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் ஏற்பாடுகளுடன் வந்து, மேற்குக் கரையில் சூரத் என்ற இடத்திலும், கிழக்கில் வங்காள தேசத்திலுள்ள ஹூக்ளி என்ற இடத்திலும் வியாபார நிலையங்களை அமைத்துக்கொண்டனர், இவர்களுக்குக் 'கிழக்கிந்தியக் கம்பெனி' என்று பெயர் வைத்துக் கொண்டனர். இவர்கள் 1639-ம் ஆண்டில், இப்போது சென்னை இருக்கும் பிரதேசத்தைச் சந்திரகிரி அரசனிடமிருந்து பெற்று ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினர். 1668-ம் ஆண்டில் பம்பாய்த் தீவையும் அடைந்தனர், 1694-ல் காளிக்கட்டம் என்னும் இடத்தையும் கிரயத்திற்கு வாங்கி அங்கு வில்லியம் என்னும் கோட்டையைக் கட்டினர். அதுவேதான் கல்கத்தா என்னும் பட்டணமாகிற்று. பிறகு, கிழக்குக் கடற்கரையில் உள்ள தேவனும் பட்டணத்தில் ஸெயின்ட் டேவிட் கோட்டையை

யும் கட்டிக்கொண்டனர். இவ்வளவும் வியாபாரப் பாது காப்பின் பேரால் ஆங்காங்குள்ள மன்னர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டவைகளாகும்.

ஆங்கிலேயருக்குப் பிறகு வந்த பிரஞ்சுக்காரர்களும் வியாபாரத்தின் பேராலேயே கிழக்குக் கரையிலுள்ள புதுச்சேரியையும், வங்காளத்தில் சந்திரநாகூரையும், மேற்குக் கரையில் மாஹியையும் தங்களுக்கே உரியவைகளாகக் கைப்பற்றிக் கொண்டனர்.

பிரஞ்சுக்காரர்களுக்குத் தலைவனாக வந்த டூப்ளே இந்தியாவில் பிரெஞ்சு இராச்சியத்தை ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணினான். ஆங்கிலேயரும் தங்களுடைய கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியை இந்தியாவிலுள்ள இராச்சியங்களில் நிலை நிறுத்தவேண்டும் என்று எண்ணினர். ஆகவே, இருவரும் ஏககாலத்தில் தத்தம் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக எல்லாவிதச் சூழ்ச்சிகளையும் கையாடினர். உள் நாட்டு மன்னர்களின் விவகாரங்களில் தலையிட்டு வேற்றுமையை வளர்த்தனர்.

அதனால், முதலாவது கர்நாடக யுத்தம் (1745-48) நடந்தது அதில் பிரஞ்சுக்காரர்கள் வெற்றி பெற்றுச் சென்னையை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். பிறகு, கர்நாடக நவாப் அன்வருத்தீனை அடையார் யுத்தத்தில் முறியடித்தனர். ஆனால், 1748-ல் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் ஐரோப்பாவில் நடந்த ஆஸ்டிரிய நாட்டு வாரிசுப்போர் சமாதானத்தில் முடிந்ததால் சென்னையை ஆங்கிலேயர் வசமே பிரஞ்சுக்காரர்கள் திருப்பிக் கொடுத்து விடும்படியாக நேர்ந்தது.

1748-ம் ஆண்டில் நிஜாமுல் முல்க் இறந்த பிறகு, வாரிசுச் சண்டை கிளம்பிற்று. அந்தச் சமயத்தில் கர்நாடக நவாப் வாரிசில் ஒருவனுகிய சந்தாசாகிப் மகாராஷ்டிரர் சிறையினின்றும் விடுபட்டு வந்தான். பிரஞ்சுக்காரர்கள் சந்தா சாகிபைச் சேர்த்துக்கொண்டு கர்நாடக நவாபான அன்வருத்தீனை ஆம்பூரில் தோற்கடித்துச் (இரண்டாவது கர்நாடக யுத்தம் 1749-52) சந்தா சாகிபை நவாபாக்கினர்.

பிறகு, நிஜாம் ராச்சியத்திற்கு முஸாபர் ஜங்கை ஆதரித்தனர். அச்சமயம் நாஸர் ஜங்கும் கொல்லப்படவே ஸல்பட் ஜங்கை நிஜாம் மன்னனுக்கினர். இதனுல், ஆங்கிலேயருடைய வியாபாரமும், செல்வாக்கும் பாதிக்கப்படும் என்ற பயம் ஆங்கிலேயருக்கு ஏற்படவே, அன்வருத்தீனுடைய மகன் முகமதலிக்கு உதவி செய்வதாக முன் வந்தனர்.

கிளைவ் என்னும் ஆங்கிலேய வீரன் முதலில் ஆற்காட்டைக் கைப்பற்றினுன். பிறகு, முகமதலியையும் கூடச் சேர்த்துக்கொண்டு திருச்சினுப்பள்ளியை முற்றுகை இட்டான். அந்த யுத்தத்தில் சந்தாசாகிப் தோற்கடிக்கப் பட்டதோடு கொல்லவும் பட்டான். ஆங்கிலேயர் முகமதலியை ஆற்காட்டு நவாபாக ஆக்கி விட்டனர். அதனுல், ஆங்கிலேயருடைய செல்வாக்கு அதிகரித்தது.

அதற்குப் பிறகு, மூன்ருவது கர்நாடக யுத்தம் (1757-63) பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே நடந்தது. வங்காள நவாபான ஸுராஜுத் தௌலாவை ப்ளாசி யுத்தத்தில் கிளைவ் தோற்கடித்து 24 பர்கானுக்களைக் கைப்பற்றிக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியை நிறுவி

னன். கர்னல் போர்டு என்பவன் வட சர்க்காரை நிஜாமிட மிருந்து பெற்ருன். தென் நாட்டில் டூப்ளேய்க்குப் பிறகு பிரஞ்சுத்தலைவனுக வந்த கௌன்ட்-டி-லாலி என்பவன் சென்னையை முற்றுகையிட முடியாமல் திரும்பிப்போய்க் கொண்டிருக்கையில் வந்தவாசி என்னும் இடத்தில் ஆங்கி லேய வீரனுன அயர்கூட் என்பவனுல் முறியடிக்கப்பட் டான். அத்தோடு பிரஞ்சு ஏகாதிபத்திய ஏற்பாடும் முடி வடைந்தது.

# 3. ஆங்கில ஏகாதிபத்தியம்

இன்றைய அரசியல் உலகில் கடைசி ஏகாதிபத்திய மாக விளங்கும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு, அன்று இந்திய உபகண்டத்திலுள்ள சுதேச மன்னர்களின் தேசங்களை ஆக்கிரகித்துக்கொள்ளும் ஆரம்ப வேலைகளை மிகவும் திறமை யாகச் செய்து முடித்தவன் கிளைவ். அவன் வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை ஏற்படுத்தியதோடு இந்திய உப கண்டத்தை விட்டுத் தொலைந்தான்.

பிறகு, மகாராஷ்டிரர் இராச்சியத்தில் 1772-ல் மாதவ ராவ் பீஷ்வா இறந்ததினுல் அவனுடைய சகோதரன் நாரா யணராவ் பீஷ்வா அரசனுனன். ஆனுல், அவனும் ஒரு வருடத்திற்குள் கொல்லப்பட்டதினுல், மகாராஷ்டிர இராச்சி யத்தில் குழப்பம் ஏற்பட்டது. அதைப் பயன்படுத்திக் கொள்ள ஆங்கில கவர்னர் ஜெனரல் ஒரு பெரும் படையை மேற்குக் கரைக்கு அனுப்பிக் குழப்பத்தை அடக்கி மாதவ ராவ் என்பவனைப் பீஷ்வா வாக்கி ரகுநாதராவ் என்பவ னுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய் தான்.

அதன் பிறகு, மைசூரை ஆண்டுகொண்டிருந்த திப்பு சுல்தான் மூன்றாந்தடவையாக ஆங்கிலேயர்மீது போர் தொடுத்ததின் காரணமாகச் சீரங்கபட்டணம் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ் வுடன்படிக்கையின்படி திப்பு சுல்தான் தன்னுடைய இராச்சியத்தில் பாதியை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டான். ஆங்கிலேயர் திப்புவிடமிருந்து வாங்கிய இராச்சியத்தில் கடப்பை, கர்நூல், பல்லாரி முதலிய இராச்சியங்களை நிஜாம் மன்னனுக்கும், மலையாளம், சேலம், மதுரை முதலிய இராச்சியங்களைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிக்கும், மீதியை மகாராஷ்டிரர்களுக்குமாகப் பங்கு போட்டுக் கொண்டனர். இத்தகைய சூழ்ச்சியின் மூலம் ஆங்கிலேயர்களும் சுதேச மன்னர்களின் பங்காளிகள் என்ற நிலைமைக்கு வந்து விட்டனர்.

இனி, ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்திய உபகண்டத்தில் தனித்தனியான தேசங்களைத் தனித்தனி மன்னர்களின் ஆட்சிக்குப் பங்கம் வராமல் பாதுகாப்பதின் மூலம் தமது ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டினர் என்பதே இங்கு கவனிக்கத் தகுந்த முக்கிய விசயமாகும். கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாக வந்த மார்க்குவிஸ் ஆப் வெல்லெஸ்லி என்பவன் உதவிச் சேனை ஏற்பாடு என்று ஒரு திட்டம் தீட்டிச் சுதேச மன்னர்கள்மீது திணித்தான்.

அந்தத் திட்டத்தின் விவரங்களாவன :—

(1) ஆங்கிலேயர் உதவியை நாடி ஒவ்வொரு தேசத்தரசனும் அவனவன் தேசத்திற்குள் ஆங்கிலப் படை ஒன்றை வைத்துக்கொள்ளவேண்டும் அதன் சிலவுக்கான தொகையை அந்தந்த அரசர்களே கொடுத்துவிட வேண்டும்.

(2) சுதேச அரசர்கள் ஆங்கிலேயர்களுடன் அன்போடு நடந்து கொள்ளவேண்டும்.

(3) ஆங்கிலேயர்களைத் தவிர வேறு ஐரோப்பியர்களைத் தமது தேசங்களில் உத்தியோகங்களில் வைத்துக் கொள்ளக்கூடாது.

(4) ஆங்கிலேயருடைய உத்திரவின்றி வேறு யாருடனும் சண்டையோ, சமாதானமோ செய்துகொள்ளக் கூடாது.

(5) ஒவ்வொரு தேசத்திலும் ஒரு ஆங்கில அதிகாரி இருக்கவேண்டும்.

இவைகளேதான் அன்று ஆங்கில ஏகாதிபத்திய அடிப்படையை அமைப்பதற்குரிய மூலக் கோட்பாடுகளாய் விளங்கின. ஆங்கிலேயர்கள் இந்திய உபகண்டத்தில் ஏகாதிபத்தியம் புரிவதற்காகத் தங்கள் இராணுவ பலத்தைத் துருப்புச் சீட்டுகளைப் போல் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். வெள்ளையர்களின் இராணுவ பலம் இல்லாவிட்டால் இந்திய உப கண்டத்தில் அமைதியை நிலைநாட்ட முடியாத நிலைமையை அன்று முதல், இன்று வரையில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை மாறுதவரையில் 'வெள்ளையர் வெளியேற்றம்' என்பது வீண் வாதப் பிரதிவாதங்களாகவே இருக்கும் என்ற உண்மையான பிரச்னையை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அன்று சுதேச மன்னர்களுக்குள் ஒற்றுமையும் நிராக்கிரகிப்பு உடன்படிக்கையும், ஏற்பட்டுச் சாம்ராச்சிய ஏகாதிபத்திய வெறியை அறவே ஒழித்திருந்தால் வெல்

லெஸ்லி திட்டம் தலைகாட்ட முடிந்திருக்குமா? இன்றும், ஓரே இந்தியா என்ற ஏகாதிபத்திய வெறி காங்கிரஸ் தலைவர்களின் உள்ளத்திலிருந்து ஒழிந்தபாட்டைக் காணோமன்றோ! இதனால் புதிய வெல்லெஸ்லி திட்டம் ஏற்பட்டாலும் ஆச்சரியமுண்டோ?

அக்காலத்தில் அவ்வுதவிச்சேனைத் திட்டத்தை நிராகரித்து விட்டு அஞ்சா நெஞ்சினனாய் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த மாவீரன் திப்பு சுல்தானை அவனுடைய மந்திரிகளில் ஒருவனாகிய பூரணய்யா என்ற ஆரியன் ஆங்கிலேயரிடம் இலஞ்சம் பெறுவதற்காகக் காட்டிக்கொடுத்தான். பூரணய்யாவின் துரோகச்செய்கையினால் திப்பு சுல்தான் படை பலம் குன்றி யுத்தகளத்தில் மாண்டான்.

உதவிச்சேனைத் திட்டத்தை முதன் முதல் ஏற்றுக் கொண்டவன் நிஜாம் மன்னன். ஆனால், திப்புவைப் போல அத்திட்டத்தை எதிர்த்தவர்கள் மகாராஷ்டிர மன்னர்களாகிய சிந்தியா, ஹோல்கார், பீஷ்வா முதலியோரும் ஆங்கிலேயருடைய படைகளால் தோற்கடிக்கப்பட்டதினால் பிறகு அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். கடைசியாக உதவிச்சேனைத்திட்டத்திற்கு அயோத்தி நவாபும் கட்டுப்பட்டான்.

கி. பி. 1833-ல் புதுப்பிக்கப்பட்ட உரிமைச்சாசனப்படி (charter act) கிழக்கிந்தியக் கம்பெனியார் வியாபாரத்தை மற்ற ஆங்கில வியாபாரக்கம்பெனிகளிடம் ஒப்படைத்து விட்டு இந்திய அரசாட்சியில் முழுக்கவனமும் செலுத்த ஆரம்பித்தனர்.

லார்டு ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில், ஆங்கிலேயருக்குச் சொந்தமான இராச்சியங்களில்

கூர்க்கர்கள் புகுந்து புரட்சி செய்து கொண்டிருந்தமையால் அவர்களை அடக்க ஜெனரல் ஆக்டர்லோனியின் தலைமையில் ஒரு ஆங்கிலப்படையை அனுப்பி நேபாளத்தின் மீது போர் தொடுத்தனர். அந்த யுத்தத்திற்குப் பிறகு, நேபாள தேசத்து அரசனுக்கும், ஆங்கிலேயருக்குமிடையே "சிகவுலி" உடன்படிக்கை ஏற்பட்டு நேபாளம் தனியரசாகப் பிரிக்கப்பட்டு விட்டது. பிறகு மகாராஷ்டிரர்களும், ஆங்கிலேயர்களிடம் இழந்த அதிகாரங்களைத் திரும்பப் பெறுவதற்காக இரண்டாம் பாஜிராவ் பீஷ்வாவின் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சியை ஆங்கிலப்படை அடக்கி ஒடுக்கி விட்டதோடு மகாராஷ்டிர தேசங்களை எல்லாம் ஆங்கிலேயர் தமது பம்பாய் இராச்சியங்களுடன் சேர்த்துக்கொண்டனர். ஆனால், மீண்டும் அங்கு கிளர்ச்சி உண்டாகாதிருப்பதற்காகவே சடாரா என்னும் ஒரு பிரதேசத்தை மட்டும் சிவாஜி வம்சத்தில் வந்த ஒருவனுக்குக் கொடுத்து அவனை அரசனாக்கித் தமது கைப்பாவையாக வைத்துக்கொண்டனர்.

பிறகு, ஆங்கிலேயர்கள் முதலாவது பர்மிய யுத்தத்தைச் செய்து அஸ்ஸாம், அரக்கான், டெனசரி முதலிய தேசங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

அதன் பிறகு, வில்லியம் பெண்டிங் காலத்தில் குடகு நாட்டிலுள்ள அரசனை நீக்கிவிட்டுக் குடகையும், மைசூர் தேசத்து அரசனாகிய கிருஷ்ணராஜ உடையாரை நீக்கிவிட்டு மைசூரையும் ஆங்கில இராச்சியாதிகாரத்திற்கு உட்படுத்திக் கொண்டனர்.

அந்தக்காலத்தில் ரஷ்யர்கள் இந்தியா மீது படை எடுத்து வரலாம் என்று ஒருவித பயம் ஆங்கிலேயர்களுக்கு

இருந்ததால் சட்லெட்ஜ் நதிக்குக் கிழக்கிலுள்ள நபாபாடியாலாப் பிரதேசங்களில் சீக்கிய அரசனாக விளங்கிய ரஞ்சிட் சிங்கோடும், சிந்துப் பிரதேசத்து அமீர்களுடனும் ஓர் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர்.

பிறகு, காபூல் கணவாயைக் காவல் காப்பதற்காக, ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட வார்சுச் சண்டையைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு ஆங்கிலப் படையைக்கொண்டுபோய் அங்கு வைத்திருந்தனர். அப்படையைச் சுதேச மன்னனை டாஸ்டின் மகன் அக்பர் நிர்மூலம் ஆக்கிவிட்டான். அதனால் எல்லன்பரோ வென்னும் ஆங்கில வீரன் ஒரு பெரும் படையை அனுப்பி டாஸ்டின் மகன் அக்பரைத் தோற்கடித்துவிட்டு டாஸ்டையே அமீராக்கினான். பிறகு, சிந்துப்பிர தேசத்து அமீர்களை எல்லாம் துரத்திவிட்டு அப்பிரதேசங்களை ஆங்கில இராச்சியாதிகாரத்திற்கு உட்படுத்திக்கொண்டான். அவனுக்குப் பிறகு சேனைத் தலைவனாக வந்த லார்டு கப் என்பவன் சீக்கியர்களை அலிவால், பெரோஜ்ஷா, முட்கி, சோபரான் என்னும் பிரதேசங்களில் தோற்கடித்துச் ஸட்லெட்ஜுக்கும், பீயாஸுக்கும் மத்தியிலுள்ள தேசங்களை ஆங்கில இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டு காஷ்மீரத்தை மட்டும் குலாப்சிங்கிற்கு விற்பனை செய்துவிட்டான்.

லார்டு டல்ஹௌஸி காலத்தில் இரண்டாவது சீக்கியர் யுத்தம் நடந்தது. அதில் ஆங்கிலேயர் வெற்றியடைந்து பஞ்சாப் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டனர். பிறகு, இரண்டாவது பர்மிய யுத்தத்தை நடத்திக் கீழ் பர்மா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர். சரியான அரசாட்சியாக இல்லை என்று கூறி அயோத்தியையுங்கூடக் கைப்பற்

றிக்கொண்டனர். சடாரா, நாக்பூர், ஜான்ஸி முதலிய இராச்சியங்களுக்கு மன்னர்களின் சந்ததி இல்லை என்று அவைகளையும் ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்துக்கு உட்படுத்திக்கொண்டனர். அந்தக் காலத்தில் லார்டு டல்ஹௌஸி 'லாப்ஸ்' திட்டம் என்று ஒன்றை ஏற்படுத்தினான்; அதன் மூலம், சந்ததி அற்ற சுதேச அரசர்கள் சுவீகாரமும் செய்துகொள்ளக் கூடாது என்று தடுத்தான். இதனால், யுத்தமே இல்லாமல் அநேக தேசங்களை ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்திற்கு உட்படுத்திவிட முடிந்தது. இதை எதிர்க்கக்கூடிய பலம் அற்ற சுதேச மன்னர்கள் மிகவும் மனங் கலங்கிக்கொண்டிருந்தனர்.

# 4. முதலாவது புரட்சி

1856-ம் ஆண்டில் ஆங்கிலேயரிடமிருந்த இந்தியச் சிப்பாய்களுக்குப் புது மாதிரியான துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன. அதன் தோட்டாவை உபயோகிக்கு முன் அதன் மேல் சுற்றியுள்ள மூடியைப் பல்லால் கிழித்து எறியவேண்டியிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை ஆங்கிலேயர் ஆட்சி மீது வெறுப்புக்கொண்ட கிளர்ச்சிக்காரர்கள் பயன்படுத்திக் கொண்டு புரட்சி இயக்கத்தை வலுப்படுத்தினர்.

தோட்டாக்களின் மீது சுற்றியுள்ள மூடிகள் பன்றிக் கொழுப்பாலும், பசுவின் கொழுப்பாலும், செய்யப்பட்டவைகள் என்று, முறையே இஸ்லாமியச் சிப்பாய்களுக்கும், இஸ்லாமல்லாத சிப்பாய்களுக்கும் கூறி, ஆங்கிலேயர் மீது ஆத்திரமும், வெறுப்பும் உண்டாகச் செய்தனர்.

கிளர்ச்சிக்காரர்களின் எண்ணம் பலித்தது. சிப்பாய்கள் எல்லோரும் புரட்சியிலீடுபட்டனர்; மேலும், எற்கனவே சேனையிலிருந்து விலக்கப்பட்டு வேலை இல்லாமல் திரிந்துகொண்டிருந்தவர்களும் புரட்சி இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர். ஆகவே, ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த முதலாவது புரட்சி இயக்கம் வலிமை பெற்றே விளங்கிற்றெனலாம்!

இந்திய உபகண்டத்தின் சுதந்தரத்தைக் கோரி ஆரம்பித்த அம்முதலாவது புரட்சியை மீரட், டில்லி கான்பூர், லக்னௌ, ஜான்ஸி முதலிய நகரங்களில், நாணாசாகிப், தாந்தியாதோபி அஹமதுஷா, லட்சுமிபாய் முதலியவர்கள் தலைமை வகித்து நடத்தினர். ஆனால், புரட்சியை நடத்திய தலைவர்களிடம், புரட்சிக்குப் பிறகு நிலை நாட்டவேண்டிய நிர்ணயமான திட்டங்கள் எதுவும் இல்லாமையாலும், புரட்சி செய்த சிப்பாய்களுக்குள்ளும் ஒற்றுமையான நோக்கங்களெதுவும் இல்லாமையாலும், பொதுவான இலட்சியமாகிய சுதந்தரப் பிரச்னையை மக்கள் உள்ளத்தில் பதிய வைக்கக் கூடிய பிரச்சார வசதிகள் இல்லாமையாலும் பொதுமக்கள் அப்புரட்சி இயக்கத்தில் சரியான பங்கு கொள்ள முடியாமல் ஆகிவிட்டது.

பொதுமக்களின் ஒத்துழைப்பற்ற முதலாவது சுதந்தரப் புரட்சிக்கு விரோதமாகச் சீக்கியர்களும், கூர்க்கர்களும் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தனர். கடைசியாக, ஆங்கிலேயர் சேனைத்தலைவர்களான ஹாவ்லக், ஊட்ரம் என்பவர்களின் தீவிரத் தாக்குதல்களினால் முதலாவது புரட்சி ஒடுக்கப்பட்டது.

அதன் பிறகு, ஆங்கிலேயர் முகலாயச் சகக்ரவர்த்தியின் பட்டத்தையும் பிடுங்கிக்கொண்டு அவரை இரங்கூனுக்கு அனுப்பிவிட்டனர். அதே சமயத்தில் 'லாப்ஸ்' திட்டத்தை நீக்கிவிட்டுச் சுதேச மன்னர்கள் சுவீகாரம் செய்து கொள்வதையும் அனுமதித்துக் கொண்டனர். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடான செய்கைகளே! எனினும் இவைகளே ஆங்கிலேயருடைய பரம்பரையான இராசத் தந்திரச் செய்கைகளாக இருந்து வருகின்றன என்பதை, இந்திய உபகண்டத்திலுள்ள அரசியல் வாதிகளில் பலர் இன்னும் அறிந்து கொள்ள வில்லையே! என்று எண்ணும்போது நமது அரசியல் வாதிகளுக்கு அரசியல்ஞானம் மிகக்குறைவு என்பது தெளிவாக வில்லையா?

முதலாவது புரட்சிக்குப் பிறகே, கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சி முடிவடைந்து, இங்கிலாந்தின் அரசி விக்டோரியா மகாராணி இந்திய உபகண்டத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படியாக நேர்ந்தது. அதனால், ஆங்கில கவர்னர் ஜெனரலுக்கு இராசப் பிரதிநிதி என்ற பட்டமும் வழங்கப்பட்டது. முதலாவது இராசப்பிரதிநிதியாக லார்டு கர்னிங் நியமிக்கப்பட்டான்.

விக்டோரியா மகாராணியே ஆங்கில ஏகாதிபத்திய சாம்ராச்சிய அமைப்பிற்கு அசைக்க முடியாத நூதனமான அடிப்படையை இந்திய உபகண்டத்தில் நிலை நாட்டிய பெருமைக் குரியவளாவாள்.

முதலாவது புரட்சியைச் சிப்பாய்க் கலகம் என்று கிழக்கிந்தியக் கம்பெனியார் மட்டுமே கருதி இருந்திருக்கலாம்! ஆனால், விக்டோரியா மகாராணி போன்றவர்கள் அவ்வாறு

கருதியிருக்க முடியாதென்பதற்கு மகாராணியின் பிரகடனத்தில் போதிய விளக்கங்கள் இருப்பததைக் காணலாம்!

விக்டோரியா மகாராணியுடைய பிரகடனத்தில் உள்ள முக்கியமான மூன்று அடிப்படைத் திட்டங்களே ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆணிவேர்களாய் விளங்குகின்றன. 1-வது இந்திய உபகண்டத்திலுள்ள பல்வேறு சாதிப்பிரிவுகளேயும், மதப்பிரிவுகளேயும் ஆதரிப்பதுடன்; அவரவர்களின் மதாச்சார அனுட்டானங்களே அவரவர்களின் விருப்பம் போல் நிறைவேற்றிக் கொள்ளும் முறையில் அவரவர்களுக்குத் தனித்தனிப் பாதுகாப்பு வசதிகளே ஆங்கிலேயர் ஆட்சியில் செய்து கொடுக்கப்படும்.

2-வது இந்திய உபகண்டத்தில் உள்ள அரசர்களின் (சமஸ்தானுதிபதிகளின்) தனித்தனியான இராச்சிய உரிமைகளும், கௌரவங்களும், எப்போதும் போல் மரியாதையுடன் பாதுகாக்கப்படும்.

3-வது, இந்திய உபகண்டத்திலுள்ள பிரஞ்சு இராச்சியங்களாகிய புதுச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர், மாகி முதலிய தேசங்களேயும்; டச்சு இராச்சியங்களாகிய கோவா, டையூ, டாமன் முதலிய தேசங்களேயும்; கூர்க்கர் இராச்சியமாகிய நேபாள தேசத்தையும் பாதிக்கக்கூடிய எவ்விதமான எதிர் நடவடிக்கைகளும் ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்படாது என்பதுடன், அவரவர்களுடைய ஆட்சியை அவரவர்களே முழு சுதந்தரத்துடன் நடத்துவதற்குரிய எல்லா வசதிகளேயும் செய்து கொடுக்கப்படும்.

மேற்கூறிய மூன்று திட்டங்களிலிருந்து மிகத் தெளிவாக விளங்கக்கூடிய உண்மை என்ன? இந்தியா ஒரே தேசம்

அல்லவென்பதும், இந்தியர் என்று ஒரே சமுதாயம் இல்லை என்பதும், இந்திய உபகண்டத்தில் ஒரே ஆட்சியும் இல்லை என்பதுந்தானே.

பொதுவாக இம் மூன்று பிரச்னைகளையும், முக்கியமாக இதில் முதலாவது பிரச்னையாக உள்ள சாதி, மதப் பிரிவுகளையும், பாதுகாப்புகளையும் பற்றிய விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக இந்திய உபகண்டத்திலுள்ள பல்வேறு இனங்களும் ஒன்றுகூடி ஒருசமரசமான முடிவுக்கும், இன அரசுகள் தனித்தனியே அமைத்துக் கொள்வதற்கான ஒரு சிறந்த தீர்மானத்திற்கும் வரக்கூடிய முயற்சியிலீடுபட்டு அதில் வெற்றியுற முயலாததால் அன்றோ முதலாவது சுதந்தரப்புரட்சி விழலுக்கிறைத்த இரத்தமாயிற்று!

அம் முயற்சியி லீடுபட்டு இந்திய உபகண்டத்திலுள்ள பல்வேறு இனங்களின் சாதிபேத மதாச்சாரங்களுக்குப் போதிய பாதுகாப்பளிப்பதன் மூலம் அவர்களைத் திருப்தி செய்ததாலன்றோ விக்டோரியா மகாராணியினுல் இந்திய உபகண்டத்தில் ஆங்கிலேயருடைய ஏகாதிபத்தியத் திட்டத்தையும், சுரண்டல் திட்டத்தையும் நீண்டகாலமாயினும் நிலை குலையாதிருக்கும்படி அமைக்க முடிந்திருக்கிறது?

இந்த சூட்சமத்தை அறியாத அரசியல் வாதிகள் அரை நூற்றுண்டு காலமாக இந்திய உபகண்டத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டதும் வீணுயிற்றல்லவா?

இந்திய உபகண்டத்தின் உண்மையான தன்மையை உணர்ந்து அதற்குத்தகுந்தபடி அரசியல் பிரகடனம் செய்த மகாராணியின் முயற்சி வெற்றி அடைந்தது. ஆனுல், இந்

திய உபகண்டத்தின் அரசியல் வாதிகள் உண்மையை உண ராததாலோ! அல்லது, உண்மையை மாற்றி அமைத்து விடலாம் என்ற எண்ணத்தினுலோ! இங்குள்ள பல்வேறு இனங்களை ஒன்ருக்கும் ஒட்டுமான வேலையிலும், பல்வேறு தேசங்கள் நிறைந்த இந்திய உபகண்டத்தை ஒரே தேசமாக் கும் பைத்திய காரத்தனமான 'பாரத்மாதா' பிரச்சாரத்தி லும் இறங்கியமையால் இழிவும், தோல்வியும், வீண் காலப் போக்கும் அடைந்திருக்கின்றனர்.

இந்த நிலைமையை 1856-ம் ஆண்டில் நடந்த முதலா வது புரட்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்போமேயானுல், சற்றே றக் குறைய அதே நிலைமையில்த்தான் இன்று காங்கிரஸ் திராவிடர்கள், திராவிடநாட்டில் காங்கிரஸின் பேரால் நிர்க் கதியாக நிற்பதும் தெரியவரும். ஏனெனில், காங்கிரஸ் திரா விடர்களிடம் தங்கள் பிரதேச ஆட்சி முறைகளைப் பற்றிய அதிகாரமோ, பொறுப்போ, கொள்கையோ கூடக் கிடையா தல்லவா? எனவே, இவர்களை வடநாட்டின் அடிமைக ளென்றே கூறவேண்டும்.

# 5. இரண்டாவது புரட்சி

லார்டு டப்ரின் இராசப் பிரதிநிதியாக இருந்த காலத் திலும் இங்கு மூன்று முக்கிய சம்பவங்கள் நடந்தன. ஒன்று மேல் பர்மிய அரசரான தீபா ஆங்கில வியாபாரிகளை அங்கு சரியாக நடத்தவில்லை என்று காரணங்கூறி ஆங்கிலச் சேனை மேல் பர்மாவுக்குச் சென்று தீபாவின் ஆட்சியைக் கைப் பற்றிக்கொண்டு தீபாவை இந்தியாவுக்கு நாடு கடத்திற்று.

இரண்டு, விக்டோரியா மகாராணியின் தங்க விழாக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

மூன்று, H. V. ஹ்யூம் என்ற ஓர் ஆங்கிலேயனால் அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபை ஏற்படுத்தப்பட்டது; நோக்கம், ஆங்கிலேயர் ஆட்சியில் பதவிப் பிச்சை கேட்பது வேதான்.

இம் மூன்று சம்பவங்களும் ஒன்றுக்கொன்று மிகவும் பொருத்தமானவைகளாகும். மேல் பர்மாவின் அரசன் தீபா ஆங்கிலேயர் மீது வெறுப்புக் கொண்டிருந்தான். ஆகையால், அவனுடைய அரசையே கைப்பற்றிக்கொண்டு அவனைத் துரத்தி விட்டனர்.

விக்டோரியா மகாராணி இந்திய உபகண்டத்தின் பல் வேறு இனங்களின் தனியரசுகளை (சமஸ்தானங்களை)யும், சாதி மதப் பேதங்களையும் தனித் தனியே கௌரவித்துப் பாதுகாப்பதின் மூலம் அவரவர்களுக்கு ஆங்கில ஏகாதிபத்தியத்தின் மீது ஏற்படக்கூடிய வெறுப்புகளைப் புகைந்து போகும்படி செய்த பிரகடனத்தைக் குறிப்பிடும் முறையிலேயே தங்க விழாக் கொண்டாடப் பட்டது. அடுத்தபடியாகச் செய்த காங்கிரஸ் மகாசபை ஏற்பாடும் அதே காரணத்திற்காகத்தான் என்பதை அகில இந்தியக் காங்கிரஸின் பூர்வீகத்தை அறிந்தவர்கள் உணர்வார்கள்.

இந்திய உபகண்டத்தை ஆண்டுகொண்டிருந்த சமுதாயங்களின் சந்ததிகளை ஆங்கிலேயர்கள் அடக்கி ஆள்வதினால் ஏற்படும் சுதேச மக்களின் வெறுப்பையும், அதன் மூலம் வளரும் புரட்சி மனப்பான்மையையும் மாய்ப்பதற்காகவே

ஆங்கிலேயர்களில் ஒருவனாகிய H. V. ஹூயூம் என்பவனால் அகில இந்தியக் காங்கிரஸ் என்ற சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் முதலாவது கூட்டம் பம்பாயில், 1885-ம் ஆண்டு நடைபெற்றது; அதில் நிறைவேற்றிய தீர்மானங்களின் சுருக்கமாவது: 'ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்திற்குக் கட்டுப்பட்ட இராச விசுவாசமுடைய குடிகளாய் வாழ்வதற்குச் சம்மதிக்கிறோம் என்பதும், இந்தியர்களுக்கு (ஆரியர்களுக்கு) ஆங்கில ஆட்சியில் கூடுமான அடிமை உத்தியோகங்கள் வழங்கப்படவேண்டும்' என்பதுமே யாகும்.

அதன் பிறகு, நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாடு ஒவ்வொன்றிலும் சற்றேறக் குறைய இக்கருத்துக்களையுடைய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன.

திரு, தாதாபாய் நௌரோஜி காங்கிரஸிற்குத் தலைவராக வந்த காலத்தில்தான் இந்திய உபகண்டத்தின் சுதந்தரப் பிரச்னையைக் காங்கிரஸ் மகாநாட்டில் பிரரேபிக்கவும் தீர்மானிக்கவும் முடிந்திருக்கிறது. அதுமுதல், திரு, தாதாபாய் நௌரோஜி இந்திய உபகண்டத்தின் சுதந்தரத்திற்காக அரும் பெரும் முயற்சியி லீடுபட்டார். லண்டனுக்கே சென்று நேரடியான விடுதலைப் பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

அந்தக் காலத்தில், லண்டனில் படித்துக் கொண்டிருந்த ஜனாப் ஜின்னா, திரு, தாதாபாய் நௌரோஜியின் முயற்சியைக்கண்டு ஆனந்தப்பட்டார். உண்மையான ஆர்வத்துடன் இந்திய உபகண்டத்தின் விடுதலைப் போராட்டத்தில் இறங்கித் திரு, தாதாபாய் நௌரோஜியுடன் ஒத்துழைத்தார். ஜனாப், ஜின்னாவின் ஆர்வத்தையும் சுதந்தர தாகத்

தையும் உணர்ந்த திரு, தாதாபாய்நௌரோஜி ஜனப், ஜின்னு வைத் தனது அந்தரங்கக் காரியதரிசியாக வைத்துக் கொண்டு இந்திய உபகண்டத்தின் விடுதலைப் போராட்டத் தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார்.

திரு, தாதாபாய் நௌரோஜி காலத்திற்குப் பிறகு, ஜனப் ஜின்னு திரு, கோபாலகிருஷ்ணக் கோகலேயுடன் சேர்ந்து கொண்டு, இந்திய உபகண்டத்திலுள்ள பல்வேறு இனங் களின் ஒற்றுமைக்காக இந்திய உபகண்டத்தின் தேசங்கள் தோறும் சென்று தீவிரமான பிரச்சாரங்கள் செய்து வந்தி ருககிறுர். இதனல் அவருக்கு "முஸ்லிம் கோகலே" என்ற பட்டம் கிடைத்ததே யொழிய, பிரச்சாரத்தில் வெற்றி கிடைக்கவில்லை. ஆனல், ஒரு நல்ல பாடம் கற்றுக் கொண் டார் "இந்திய உபகண்டத்தின் பல்வேறு பிரிவுள்ள சமு தாயங்களை ஒரே இனத்தவர் போல் ஆக்கும் ஒட்டுமான வேலைகளோ! அல்லது ஒற்றுமைப்படுத்தும் ஒரே கட்டுப் பாடான திட்டங்களோ! ஆட்சி முறைகளோ! சாத்தியமா னது மல்ல, பயன்தரக்கூடியது மல்ல" என்பது தான் அந் தப் பாடம்.

அதற்குப்பிறகுதான், ஜனப் ஜின்னுவும் இந்திய உபகண்டத்தின் சுதந்தரத்தை அடையவேண்டுமானல், அகில இந்தியக் காங்கிரஸ் என்ற ஒரு இயக்கம் மட்டும் இருந் தால் போதாது என்று எண்ணினர். எனவே, ஆங்கிலேயர் நன்மைக்காக ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட காங்கிரஸை திரு, தாதாபாய் நௌரோஜி கைப்பற்றி அதன் மூலமே சுதந் தரப் பிரகடனத்தைப் பிரரேபித்துத் தீர்மானம் செய்து செய லாற்றியது போல், ஜனப் ஜின்னுவும், நவாபுகளின் நன்மைக் காகவே நவாபுகளாலேயே ஏற்படுத்தப்பட்டிருந்த அகில

இந்திய முஸ்லிம் லீக்கைக் கைப்பற்றி அதன் மூலம் இந்திய உபகண்டத்தின் உண்மையான விடுதலைக்காக முஸ்லிம்களின் சார்பாகப் போராடக்கூடிய விதத்தில் திட்டங்கள் தீட்டித் தீர்மானங்களும் நிறைவேற்றி அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும் பெரும் பணியிலீடுபட்டுத் தீவிரமாகத் தொண்டாற்றி வரலானார்.

1918-ம் ஆண்டில் இந்திய உபகணடத்தின் பல்வேறு இனங்களின் அரசியல் வாதிகள் ஒன்றுசேர்ந்து ஆங்கில ஆட்சியை ஒரு முகமாக எதிர்த்துத் தீவிரமான புரட்சியிலீடுபட்டனர். அச்சுதந்தரப் புரட்சியை அடக்குவதற்காக 'ரௌலட்' என்றதோர் கடுமையான அடக்குமுறைச் சட்டத்தை 1919-ஆம் ஆணடில் ஆங்கில அரசாங்கம் ஏற்படுத்திற்று. அதனால் ஆவேச முற்ற புரட்சிக்காரர்கள் முன்னிலும் பன் மடங்கு அதிகமாகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து வெள்ளையர் ஆட்சியை அறவே வெறுத்ததோடு வெள்ளையர்களின் வியாபாரப் பொருள்களையும் பகிஷ்கரிப்பதற்கு அறிகுறியாக நெருப்பிலிட்டுக் கொளுத்தினர். இதையே இரண்டாவது புரட்சி என்று குறிப்பிடலாம். இப்புரட்சி நடந்த காலத்தில், புரட்சியிலீடுபடாத 400 நிரபராதிகளைச் ஜாலியன் வாலா பாக்கில், ஜெனரல் டயர் என்பவன் சுட்டுக் கொன்றான்.

இரண்டாவது புரட்சி நடந்து கொண்டிருக்கும் போது தான் காந்தியார் காங்கிரஸிற்குள் பிரவேசித்தார். புரட்சியின் கோர சுரூபத்தையும், ஏகாதிபத்தியத்தின் கொடிய அடக்குமுறைத் தாண்டவத்தையும் கண்டு மனம் கலங்கி விட்டார்.

காந்தியார் பகவத்கீதையை அதிகப் பக்தி சிரத்தை யோடு போற்றுகிறவர். மகாபாரத யுத்தத்தில், சகோதரர் களுடன் கடுமையாகப் போராட மனம் இசையாததால் கலக்கமுற்றுத் தயங்கிய அருச்சுனனுக்குக் கிருஷ்ணபர மாத்மா தனது உபதேசத்தின் மூலம் போதிய தைரியத்தை ஊட்டி அருச்சுனன் உள்ளத்தைக் கலக்கமற்ற கல்லாக்கி வில்லைக் கையிலேந்தி மீண்டும் முன்னிலும் அதிக உக்கிரம மாகப் போராடி வெற்றியடையச் செய்தார் என்றுகூறுவதை ஒப்புக்கொள்ளக் கூடியவரே காந்தியார்.

ஆனால், கிருஷ்ண பரமாத்மாவின் போர் முறையை ஒப் புக்கொண்டு பக்தியோடு பாராட்டும் அதே காந்தி மகாத்மா தான், இந்திய உபகண்டத்தின் சுதந்தரத்திற்காக வீறிட் டெழுந்த இரண்டாவது புரட்சியைப் புகைந்துபோகுமாறு அகிம்சா போதனையும், சாத்வீகச் சத்தியாக்கிரக உபதே சமும் செய்தாரென்றால் காந்தியாரிடம் ஒரு நிர்ணயமான கொள்கை எந்தக் காலத்திலாவது இருந்திருக்க முடியும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறதா?

காந்தியார் எப்படியோ மக்களை மயக்கிக் காங்கிரஸின் செல்வாக்கைக் கைப்பற்றிக் கொண்ட காலமுதலே, இந்திய உப கண்டத்தின் விடுதலைப் போராட்டம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கிற்று. கடைசியாக ஒன்றுக்கும் உத வாத கதர்த்திட்டத்தை மிகைப்படுத்தி பிரச்சாரம் செய்து, சுதந்தரத் தாகமுடைய தீவிரக் காங்கிரஸ் வாதிகளின் கவ னங்களைக் கைராட்டையிலும், தக்களியிலும் வசப்படுத்திக் கொண்டமையால் சுதந்தரப் புரட்சியை அடியோடு புதைந்து போகச் செய்து விட்டார். வீரக் கிளர்ச்சி செய்து சுதந் தரம் அடையத் தகுந்த இளைஞர்களை எல்லாம் கோழைக

ளாக்கிவிட்டதோடு, இந்திய உபகண்டத்தின் சுதந்தரப் பிரச்னையைச் சுமார் முப்பதாண்டுகளாக வெறும் பகட்டான சத்தியாக்கிரக லீலைகளாலும், உண்ணுவிரதச் சண்டித்தன விளம்பரப் பகட்டுகளாலும், சோம்பேறித்தனமான மௌன விரதம் அல்லது பஜனைப் பாடல்களைப் பாடுவதாலும் வீண் காலங்கடத்தும் பிரச்னையாக்கி விட்டார். இதற்கிடையில் தோன்றிய திரு, பகவத்சிங், திரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற உண்மையான ஆர்வமும் சுதந்தர தாகமும் உள்ள வீரர்களைக் காங்கிரஸிலிருந்து வெளியே விரட்டுவதற்குரிய எல்லாவகையான சூழ்ச்சிகளையும் கையாடினுர் என்ருல், காந்தீயத்தால் இந்திய உபகண்டம் எவ்வளவு பெரிய சீர் கேடும் படுபாதாள வீழ்ச்சியும் அடைந்து கிடக்கும்படி நேர்ந்தது என்பதற்கு இன்னும் என்ன அத்தாட்சிகள் வேண்டும்?

பாமர மக்களின் மனப்பான்மைக்குத் தகுந்தபடி காந்தியார் அற்புதங் கலந்த சிக்கலோடு பல பேச்சுகள் பேசி அரசியல் வாதிகளை மயக்குவார். காந்தியாருடைய பேச்சிலோ, எழுத்திலோ தெளிவிருக்காததோடு, உண்மையும் இருக்காது. அவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் வியாக்கியான கர்த்தாக்கள் தேவைப்படும், ஒவ்வொருவர் வியாக்கியானமும் ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ளதாகவே இருக்கும்.

காந்தியாருடைய 'அந்தராத்மா' பித்தலாட்டங்களைக் கூட அறிவாளிகளில் சிலர் நம்பும்படியாகவும் வீண் பிரமிப்பு அடையும்படியாகவும் செய்வதற்குத் தேசியத் தாள்கள் என்று கூறிக்கொள்ளும் நாகரிகமான விஞ்ஞான வசதிகளை

யுடைய ஏடுகளும், கொஞ்சமும் கூசாமல் பொய்ப் பிரச் சாரம் செய்கின்றன.

காந்தியாருங் கூடச் சில சமயங்களில் 'வெள்ளேயனே வெளியே போ' என்ற விதமாகப் புரட்சிப் பதங்களைப் புரட்சி மனப்பான்மையுடையவர்களின் நிர்ப்பந்தம் சகிக்க முடியாமல் கக்கி விடுவதும் உண்டு. ஆனல், அத்தகைய வார்த்தைகளுக்கு வியாக்கியானம் செய்யும்போது வெள்ளே யர் மனம் நோகாமல், விதவிதமான தத்துவங்களைக் கூறி மழுப்பி விடுவார். ஆகவே, இரண்டாவது புரட்சி காலத் தில் அப்புரட்சியை ஒழிப்பதற்காகக் காங்கிரஸில் நுழைந்த காந்தியார், இதுவரையில் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சிக்கு ஆபத்து வருமாறு ஒரு சிறு துரும்பைக்கூட அசைத்த தில்லை என்றே கூறவேண்டும். மேலும் வடநாட்டு முதலா ளிகளின் கைப்பாவையாக இருந்து கொண்டு, அம் முதலா ளிகளின் ஆதிக்கத்திற்கும்,சுரண்டலுக்கும் திராவிடநாட்டில் நிரந்தரமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கே அவர் அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறுர் என்று நிரூபிக்கப்பட் டதை யாராலும், எவ்வகையிலும் மறுத்துக்கூற முடிந்ததா? அல்லது, காந்தீயத்தால் முதலாளித்துவத்திற்கோ! ஏகாதி பத்தியத்திற்கோ! ஆபத்து வரலாம் என்று எந்த முத லாளியேனும், ஏகாதிபத்திய வாதியேனும் அஞ்சுவதாக அத்தகையோர் நெஞ்சாரப் பொய்யாகவேனும் சொல்லிய துண்டோ?

காந்தீயத்தின் இலட்சணம் இவ்வளவு தெளிவாக விளங் கியும், அவர் அரசியல் மேடையிலும், பொது மக்களின் மேடையிலும் சிறப்பிக்கப்படுவதற்கு ஒரே ஒரு காரணந் தான் உண்டு! அதுதான் 'மகாத்மா' என்ற பட்டம்!

மக்களின் குருட்டு நம்பிக்கை, மூடக் கொள்கை, அறியாமை முதலிய காரணங்களால் நிலை நிறுத்தப்பட்ட அப் பட்டமே இரண்டாவது சுதந்தரப் புரட்சிக்கும் இதர சுதந்தரக் கிளர்ச்சிகளுக்கும் சமாதி கட்டும் சக்தியைப் பெற்று விட்டதெனலாம்.

## 6. பெரியார் ஈ. வெ. ராமசாமி

1920-ம் ஆண்டில் காந்தியாரின் பகட்டான அரசியல் கிரியைகள் பல அதிக விளம்பரம் பெற்றுவிட்டன. தீண்டாமை ஒழிப்பும், மதுவிலக்கும், கதர் திட்டமும் மிகவும் படாடோபமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டன. அப் பிரச்சாரங்களில் மயங்கிக் காங்கிரஸில் சேர்ந்து உண்மையாகப் பாடுபட்டுத் தொண்டாற்றியவர்களில் சிறந்தவர் பெரியார் ஈ. வெ, ராமசாமி ஒருவர்தான் என்பதை மிகவும் தெளிவாக விளக்கிக் காட்டமுடியும்.

பெரியார் ஈ. வெ. ரா. தீண்டாமையையும், சாதிபேதக் கொடுமைகளேயும் சிறு வயதிலிருந்தே வெறுத்து வந்தவராதலினல், காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் தீண்டாமை ஒழிப்பையும், சாதிபேத ஒழிப்பையும் காரியத்தில் நிறைவேற்றத்தகுந்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதே என்ற ஒரே ஆர்வத்தினல்த்தான் பெரியார் ஈ.வெ.ரா. உடனே காங்கிரஸில் சேர்ந்து காந்தியாருடைய வாக்கெல்லாம் உண்மையானதாக இருக்கும் என்று நம்பி, ஒத்துழையாமை இயக்கத்தில் முழுப் பங்கெடுத்துக்கொண்டு கதர் மூட்டையுடன் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று தீவிரப் பிரச்சாரம் செய்துவந்தார்.

அக்காலத்தில் கேரளத்தில் வைக்கம் என்ற ஊரிலுள்ள தெருவில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்றிருந்த வெகு நாளைய மூடக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிவதற்காக அவ்வூரில் நடந்த சத்தியாக்கிரகத்திற்குத் தக்க சமயத்தில் தானும், தன் அருமை மனைவி நாகம்மையாரும் ஒருவர் பின் ஒருவராகத் தலைமை தாங்கிப் புரட்சியும், கிளர்ச்சியும் வலுக்கச்செய்து வெற்றி பெற்றதினால் நமது பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை 'வைக்கம் வீரர்' என்ற பட்டம் சூட்டி நாடெல்லாம் போற்றின.

அதற்குப்பிறகு தமிழ்நாட்டுக் குருகுலச் சூழ்ச்சியை அறிந்து, காங்கிரஸிலேயே இருக்கும் ஆரியர்களின் அயோக்கியத்தனங்களையும், கபடச் செயல்களையும் அம்பலப்படுத்தினார். அப்போது, காந்தியாராலும் ஆரியத்தை வெறுக்கவோ வெல்லவோ முடியவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டு அதுமுதல் காந்தியாருடைய சொல்லிலும், செயலிலுமுள்ள முரண்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தார்.

நாளடைவில், காந்தியாரின் கபட நாடகமும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்குத் தெற்றென விளங்கி விட்டமையால், தாழ்த்தப்பட்டவர்களின் உண்மையான முன்னேற்றத்தைக் கருதி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வற்புறுத்திப் பேசவும், எழுதவும், காங்கிரஸ் மகாநாடுகளில் பிரரேபிக்கவும் துணிந்தார்.

ஆனால், மிகச் சிறுபான்மை வகுப்பினராகிய பார்ப்பனர்கள், இந்நாட்டில் பல வகுப்புகளாய்ப் பிரிக்கப் பட்டுள்ள பெருங்குடி மக்களை ஏமாற்றி ஏகபோகமாக அநுபவித்துக் கொண்டிருக்கும் துராக்கிரகிப்புகளுக்கு வகுப்பு

வாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் ஆபத்து வந்துவிடும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டனர். எனவே பெரியார் ஈ. வெ. ரா. அவ்வப்போது காங்கிரஸ் மகாநாட்டில் கொண்டு வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர் மானத்தைக் காங்கிரஸிலுள்ள பார்ப்பனத் தலைவர்கள் முன் னெச்சரிக்கையாக இருந்து எதிர்த்து வந்தனர்.

கடைசியாக, 1925-ல் திரு. வி. கலியாணசுந்தரம் தலைமையில் காஞ்சீபுரத்தில், நடந்த காங்கிரஸ் கூட்டத் திலும், பெரியார் ஈ வெ. ரா. வகுப்புவாரிப் பிரதிநிதித்து வத்தைப் பிரரேபித்தார். திரு வி. க. ஒரு திராவிடராக இருந்தும் பார்ப்பனத் தாசராகி வகுப்புவாரிப் பிரதிநிதித்து வத்தை நிராகரிக்கவே, இனிக் காங்கிரஸிலிருந்து கொண்டு பார்ப்பனரல்லாத திராவிட மக்களுக்கு ஒரு சிறு நன்மை யும் செய்ய இயலாது என்று முடிவாகத் தீர்மானித்துக் கொண்டு பெரியார் ஈ. வெ. ரா. அன்று முதல் காங்கிரஸி லிருந்து விலகி விட்டார்.

1925-ம் ஆண்டுவரையில் பெரியார் ஈ. வெ. ரா. உண்மையான காங்கிரஸ்வாதியாக இருந்ததின் பயனாக ஜனாப், ஜின்னாவைப் போல் பெரியாரும் அறிந்துகொண்ட நற்பாடங்களாவன: "ஆரியர்கள் காங்கிரஸின் ஆதரவைக் கொண்டே சாதி பேதத்தை நிலை நிறுத்தவும், வருணாச்சிர மத்தை ஏற்படுத்தவும் நயவஞ்சகமாகப் பாடுபட்டுக் கொண் டிருக்கின்றனர் என்பதுவும், அக்காலத்தில் அதிகாரத்தி லிருந்து வந்த பார்ப்பனரல்லாதார் கட்சியை அதிகாரத்தி லிருந்து விரட்டிவிட்டுச் சுயராச்சியக் கட்சியின் மூலம் பார்ப்பனர்களே அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குச் சூழ்ச்சி செய்கின்றனர் என்பதுவும், காந்தியாரின் காந்தீயப்

பித்தலாட்டங்களெல்லாம் வட நாட்டானின் ஆதிக்கம் இந் நாட்டில் வேரூன்றிப் பரவுவதற்கே பயன்படும் என் பதுவுமே ஆகும்.''

ஆகவே, காங்கிரஸிலிருந்து விலகியதும் பெரியார் ஈ. வெ. ரா. முதன் முதலில் இந் நாட்டிலுள்ள பெருங்குடி மக்களைச் சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்று இழிவாகக் கருதும் ஆரியத் துடுக்குத் தன்மையை வண்மையாக எதிர்த்துக் கண்டித்து இழிவை ஒழிக்கும் முயற்சியிலீடுபட்டு அல்லும் பகலும் இடையறாது தொண்டாற்றுவதற்காகச் '**சுயமரியாதை இயக்கத்தை**' ஆரம்பித்துக் கிராமங்கள் தோறும் சென்று பிரச்சாரம் செய்யலானார். "குடி அரசு'' என்றோர் வாரத் தாளின் மூலம் பாமர மக்களும் தெளிவுறுமாறு பகுத்தறிவு விளக்கேற்றி வைத்தார்.

சுயமரியாதை இயக்கம் ஆரியர்களின் கடுமையான எதிர்ப்புகளுக் கிடையேயும், ஆரிய தாசர்களாகிய இனத் துரோகிகளின் ஒழியா இன்னல்களுக்கு மத்தியிலும் தளராது ஓங்கி வளர்ந்து திராவிட நாட்டோடு மட்டுமின்றிப் பம்பாய் முதலிய வெளி மாகாணங்களிலும், இலங்கை, பர்மா,மலேயா, தென் ஆப்ரிக்கா முதலிய கடல் கடந்த நாடுகளிலுங்கூடப் பரவி விட்டது.

சுயமரியாதை இயக்கம் அரசியல் இயக்கமே அல்ல சமூக சீர்திருத்த இயக்கமே. எனினும் அரசியலும், சமூக சீர்திருத்தச் சட்டங்களை இயற்றும் வேலையும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருப்பதினால், பெரியார் ஈ. வெ. ரா. அடிக்கடி அரசியல் சட்ட திட்டங்களையும் ஆராய்ந்து மக்களுக்கு விளக்க வேண்டியவரானார்.

உலகத்திலேயே திராவிடர்களைக் காட்டிலும் அதிகமாக வறுமையின் கொடுமையை அநுபவித்துக் கொண்டிருக்கும் மக்களே கிடையாது என்று பெரியார் எண்ணினர். எனவே, சட்டப்படி வறுமையை ஒழிக்கும் பொருளாதார ஒற்றுமைக்கு எவ்வாறு வழி வகுப்பது என்று அறிய அவருள்ளம் துடித்தது. வறுமையை ஒழித்துச் சமத்துவப் பொருளாதாரத்துடன் விளங்கும் சமதர்ம ரஷ்யாவையும் அதன் ஆட்சியையும் நேரில் காணவேண்டும் என்று நமது பெரியார் ஈ. வெ. ரா. தீர்மானித்தார்.

1931-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ந் தேதி சென்னையிலிருந்து பெரியார் ஈ. வெ. ரா., தோழர் வி. ராயநாதனையும், தோழர் ராமுவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்காகக் கப்பலேறினர்.

எகிப்து, கிரீஸ், துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து ஸ்பெயின், பிரஞ்சு, போர்ச்சுக்கல் முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்றார். ஆங்காங்கே உள்ள பல பொது இயக்கங்களையும் அதன் தலைவர்களையும் கண்டு அளவளாவிப் பல உண்மைக் கருத்துக்களை உணர்ந்து தெளிந்தார்.

பெரியார் ஈ. வெ. ரா. நீண்டநாள் தங்கிய நாடு ரஷ்யா ஒன்றுதான். ரஷ்யாவில் சமதர்ம ஆட்சி எவ்வாறு நடைபெறுகின்றது? அவ்வாட்சியால் அந்நாடு அடைந்த பலன் என்ன? அந்நாட்டு மக்களின் நிலை எவ்வாறு விளங்குகின்றது? அம் மக்கள் தங்கள் அரசாங்கத்தைப் பற்றி என்ன நினைக்கின்றனர்? என்பவைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவே அப்புதிய உலகமாகிய ரஷ்யாவின் அரசாங்க

விருந்தினராய் வெகு நாட்கள் தங்கி அந்நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து பார்த்தார்.

ரஷ்ய அரசாங்க காரியாலயங்களை எல்லாம் பார்வையிட்டார். பெரிய தொழிற்சாலைகளுக்கும் சென்றார். கல்வி நிலையங்களையும் அதன் அபிவிருத்திகளையும் கண்டார். தொழிலாளர் சங்கங்களையும் பார்வையிட்டார். விவசாய பண்ணைகளுக்குச் சென்று, விவசாயம் விஞ்ஞான முறையில் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதையும் கண்டார். அந்நாட்டு அரசாங்கத்தின் பொறுப்புள்ள அதிகாரிகளைச் சந்தித்து அவ்வதிகாரிகளின் வாயிலாகப் பல உண்மைகளையும் கேட்டு அறிந்துகொண்டார். படிப்பிடங்களாகிய கலா நிலையங்களுக்கும், இனிய பொழுது போக்கிற்குரிய, நாடக சினிமா மேடைகளுக்கும் சென்று அவைகள் மக்களுக்கு எவ்வாறெல்லாம் பயன்படுகின்றன என்பதையும் அறிந்தார்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்களையும் அவருடைய தோழர்களையும் ரஷ்யப் பொதுமக்களும், தொழிலாளர்களும், அரசாங்கத்தார்களும் முறையே நன்கு வரவேற்றுப் பல வரவேற்புப் பத்திரங்களும் வாசித்தளித்தனர். பல பொதுக் கூட்டங்களில் பெரியார் ஈ. வெ. ரா. சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பற்றிச் சொற்பொழிவுகளாற்றினர். அவைகளைக் கேட்ட ரஷ்ப மக்களும் சுயமரியாதைக் கொள்கைகளைப் பெரிதும் பாராட்டினர்.

பெரியார் ஈ. வெ. ரா. மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திலிருந்து திரும்பியதும், சுயமரியாதை இயக்கக் கொள்கையுடன் சமதர்ம இயக்கக் கொள்கையையும் இணைத்துக்கொண்டு மக்களிடையே மிகத் தெளிவாகப்

பிரசாரம் செய்து திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு வர் உள்ளத்திலும் பொது உடைமைத் தத்துவத்தை விதைத்து ஆர்வமும் ஊட்டி வந்தார். இந்திய உபகண் டத்திலேயே முதன்முதலாகப் பொதுவுடைமைக் கொள்கை களை மக்களிடையே மிகவும் தைரியமாகப் பிரச்சாரம்செய்த பெருமைக்குரியவர்கள் வட நாட்டில் ஹஸரத் மோஹானி அவர்களும், திராவிட நாட்டில் சிந்தனைச் சிற்பி தோழர் M. சிங்காரவேலு, B. A., B. L., அவர்களும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுமே யாவார்கள் என்பது இங்கு குறிப் பிடத் தக்கதாகும்.

பொதுவுடைமைப்பிரச்சாரத்தினுல் பெரியார் ஈ வெ.ரா. அரசாங்கத்தின் கடுமையான அடக்கு முறைகளுக்கு ஆளாகிப் பல தடவைகள் சிறைத் தண்டனையும் அநுபவித் திருக்கிறுர். ஆதலால், காங்கிரஸ் காரர்கள் பலர் பெரியார் ஈ. வெ. ராவைச் சந்தித்து மீண்டும் காங்கிரஸில் சேருமாறு வேண்டினர். தோழர் ஜெயப்பிரகாச நாராயணன் போன்ற சமதர்மவாதிகள் ஈரோட்டுக்குச் சென்று பெரியார் இல்லத்தி லேயே கண்டு பேசியிருக்கின்றனர். நீதி (ஜஸ்டிஸ்)க் கட்சியின ரும் நமது பெரியார் ஈ.வெ. ராவைக் கண்டு தங்கள் கட்சியில் சேரவேண்டும் என்று வேண்டினர். ஆனுல், திரு. சி. ராஜ கோபாலாச்சாரியாரும், பெரியார் ஈ. வெ. ராவும் சிறையி லிருக்கும்போது இருவரும் கலந்து இயற்றிய சீர்திருத்தத் திட்டத்தை திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் காந்தியா ருக்கு அனுப்பியிருப்பதாகவும் அதைக் காந்தியார் ஒப்புக் கொண்டு விடுவாராகையால் தாங்கள் காங்கிரஸில்த்தான் சேர்ந்து என்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று பெரி யார் ஈ. வெ. ராவைத் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார்

வேண்டிக்கொண்டிருந்தார். எனினும், காந்தியார் அச் சீர்திருத்தத் திட்டத்தை ஒத்துக்கொள்ள மறுத்து விட்டதாலும், நீதிக்கட்சியினர் முன் வந்து அத்திட்டத்தை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக உறுதி கூறினமையாலும் நமது பெரியார் ஈ. வெ. ரா நீதிக்கட்சியில் சேர்ந்து அக் கட்சியையே ஆதரித்து வந்தார்.

மேலும், " காங்கிரஸின் வாயிலாகச் சமூக சீர்திருத்தம் செய்ய முடியாது; அதைச் சமதர்ம நோக்கத்திற்கும் திருப்ப முடியாது; நீதிக் கட்சியின் மூலமே சமூக சீர்திருத்தம் செய்ய முடியும்; அதைச் சமதர்மக் கட்சியாகவும் ஆக்கிவிட முடியும்" என்று பெரியார் ஈ. வெ. ரா ஏற்கனவே தீர்மானித்துக் கொண்டிருந்தமையாலும், பார்ப்பனரல்லாத இயக்கத்தையே ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணமுடையவராதலாலுமே அவர் நீதிக் கட்சியில் சேர்ந்து உழைக்க வேண்டியவரானர்.

பிறகு, இந் நாட்டில் நடந்த சட்ட சபைத் தேர்தல்களில், பித்தலாட்டகரமான பிரச்சாரம் செய்து பாமர மக்களை ஏமாற்றிக் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதும், நீதிக்கட்சி படுதோல்வியடைந்து விட்டது; கட்சியின் தலைவர்களும் தளர்ச்சியடைந்து விட்டனர். தோல்விகளை வெற்றிச் சிகரத்தை அடையும்படிக் கட்டுகளாகப் பாவிக்கும் தன்மையுடைய பெரியார் ஈ. வெ. ரா. நீதிக்கட்சிக்குப் புத்துயிரூட்டும் முயற்சியிலீடுபட்டார்.

வெற்றியடைந்த காங்கிரஸ் கட்சியின் மந்திரி சபையில் முதல் அமைச்சராகத் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் விளங்கியபோது, பள்ளி மாணக்கர்களுக்கு இந்தி மொழி

யைக் கட்டாயப் பாடம் ஆக்கியதன் விளைவாகத் தமிழர்கள் மனங் குமுறித் துள்ளி எழுந்து இந்தி எதிர்ப்புப்போர் புரிய வும் அதற்குத் தலைவராக பெரியார் ஈ.வெ.ரா. விளங்கவும் நேர்ந்தது.

அந்தச் சமயத்தில், பெரியார் ஈ-வெ-ரா தமிழர்களின் உள்ளத்தில் இன உணர்ச்சியும் ஒற்றுமையும் ஏற்படும்படி யான ஒரு திட்டத்தை வெளியிட்டார். அஃதாவது, தமிழ் நாடு ஆரியர்களின் ஆதிக்கத்திலிருந்தும், காங்கிரஸ் மேலி டத்து அதிகாரத்திலிருந்தும், விடுதலை அடைந்தாலொழிய இந்தி நுழைப்பு, இழிவு முதலிய தொல்லைகள் நம்மைவிட்டு ஒழியாது என்பதை விளக்கித் '**தமிழ்நாடு தமிழ ருக்கே**' என்ற பிரிவினைக் கிளர்ச்சியை மிகவும் கூர்மை யான தீர்க்கதரிசனத்துடன் இந்திய உபகண்டத்திலேயே முதன் முதலாக வெளியிட்டு அதன் பயனாக, இந்தி எதிர்ப்புப் போரின் பெயரால் கடுமையான சிறைத்தண்ட னையும் விதிக்கப்பட்டார்.

பெரியார் ஈ-வெ-ரா வெளியிட்ட "தமிழ்நாடு தமிழ ருக்கே" என்ற பிரிவினைக் கிளர்ச்சி தமிழ் அறிஞர்களின் கண்களைத் திறந்து உள்ளத்திலும் பாய்ந்து ஓர் அளவுக்கு இன உணர்ச்சியை உண்டாக்கிவிட்டமையால், அன்று முதல் என்றுமில்லா அளவுக்குத் தமிழர்களால் பார்ப்ப னீயம் வெறுக்கப்பட்டுவிட்டது. இச் சிறந்த பணியில் வெற்றிபெற்ற பெரியார் ஈ-வெ-ரா அவர்களையே நீதிக்கட்சி யின் தலைவராக 1938-ம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை யில் நடந்த நீதிக் கட்சியின் 14-வது மகாநாட்டில் தேர்ந் தெடுத்தனர். அப்போது பெரியார் ஈ-வெ-ரா சிறைக்குள்

தமிழன் சார்பாகத் தண்டனை அநுபவித்துக்கொண்டிருந்தார்.

திரு. தாதாபாய் நௌரோஜி காங்கிரஸ் கட்சியைக் கைப்பற்றியதும் காங்கிரஸின் நோக்கம், இந்திய உபகண்டத்தின் சுதந்தரத்தை அடைவதே என்றார்; ஜனப் ஜின்னா முஸ்லிம் லீகைக் கைப்பற்றியதும் இந்திய உபகண்டத்தின் உண்மையான விடுதலைக்காக முஸ்லிம்களின் சார்பாகப் போராடி முடிவாகப் பாகிஸ்தான் பிரிவினை மூலமே இந்திய உபகண்டத்தின் பரிபூரண சுதந்தரத்தை அடையமுடியும் என்றறிந்து அதன்படியே முயற்சி செய்து வெற்றியடைந்தார். நமது பெரியார் ஈ-வெ-ரா நீதி (ஜஸ்டிஸ்)க் கட்சியைக் கைப்பற்றியதும் (*full Independence*) முழுச் சுதந்தரம் பெறுவதே எங்கள் அடிப்படையான குறிக்கோள் என்று தீர்மானம் நிறைவேற்றி இந்திய உபகண்டத்தின் நிரந்தரமான, நிச்சயமான, உண்மையான விடுதலைக்காகத் திராவிடர்களின் சார்பாகத் திராவிட நாட்டுப் பிரிவினையைப், பாகிஸ்தான் பிரிவினைப் பிரச்னை தீர்மானத்திற்கு வரும் முன்பே வெளியிட்டுத் தீவிரப் பிரச்சாரமும் செய்து வருகின்றார்.

திராவிடர்களுக்குள் போதிய இன உணர்ச்சியும், ஐக்கிய முயற்சியும் இல்லாமையால் இன்றளவும் திராவிட நாட்டுப் பிரிவினை வெற்றியடையாமலும், அகில உலக விளம்பரம் பெறாமலும் இருந்து கொண்டிருக்கிறது. என்றாலும், இன்றைய நிலை ஒவ்வொரு இனத்தின் கண்களையும் இயல்பாகவே திறந்து விடக்கூடியதாக இருப்பதினால், பெரியார் ஈ-வெ-ராவின் ஓயா உழைப்பும், ஒழியாப் பிரச்சாரமும் வீண்போகாதென்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

# 7. திராவிடர் கழகம்

1944-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ந் தேதி சேலத்தில் கூடிய 16-வது S. I. L. F. நீதி (ஜஸ்டிஸ்)க் கட்சி மாகாண மாநாட்டில், அக்கட்சிக்குத் 'திராவிடர் கழகம்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

அதுவரையிலும் நாம் யார்? நமது நாடு எது? நம் பண்பாடுகள் என்ன? என்பவைகளை மறந்தும், மறக்கடிக்கப்பட்டும் இந்து மதம் என்ற இருண்ட குகைக்குள், பற்பல சாதிப்பிளவுகள் என்ற சாக்கடை நாற்றத்தைச் சுவாசித்துக்கொண்டு வாழ்க்கைக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் நம் நாட்டு மக்களின் அறிவுக் கண்களுக்கு ஒளி ஊட்டி வந்த நமது பெரியார் ஈ-வெ-ரா அன்று நமது இயக்கத்திற்கு நம் சொந்தப் பெயரையே சூட்டவேண்டும், நாம் பெயரற்ற அனாதைகளல்ல; சரித்திரப் பிரசித்தி பெற்ற திராவிடர்கள்! நமது நாடு திராவிட நாடு!! நாம் நமது திராவிட நாட்டின் சுதந்தரத்தை அடைந்தே தீருவோம்!!! என்று மிக்கத் தெளிவாக விளக்கினர். மக்களின் உள்ளங்களில் ஒரு மறுமலர்ச்சி தோன்றி இன எழுச்சி ஒலி முழங்கிற்று அப்போதே நமது இயக்கத்திற்குத் திராவிடர் கழகம் என்ற பொருத்தமான பெயரை அளவில்லா ஆர்வத்துடன் ஏற்று ஏகமனதாகச் சூட்டிக் கொண்டாடினர்.

மேலும், நமது பெரியார் ஈ–வெ–ரா, 1945–ம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில்திருச்சியில் கூடிய 17-வது திராவிடர் கழக மாகாண மகாநாட்டில் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவினிடையே, கூறியதாவது "44 கோடி இந்தி

யர்களுக்குள் நாமும் சேர்ந்தவர்கள் என்று சொல்லி நாம் இந்தியர் என்னும் உரிமை கொண்டாடினோமேயானால், பல துறைகளிலும் மற்ற மாகாண மக்களோடு வேறுபட்டுப் பின்னணியில் இருக்கும் 4 கோடி (திராவிட) மக்களாகிய நாம் இந்தியரில் ஒரு சிறு பான்மைக் கூட்டச் சமுதாயமாக அதுவும் 11-ல் 1-பங்குச் சிறு கூட்டத்தினராக ஆகிவிடுகிறோம்; அது தவிர நாம் நம்மை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்வோமாயின் இந்து மதத்தின் வருணாச்சிரம தர்ம முறைப்படி அதாவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அவர்ணர் (பஞ்சமர்கள்) என்கின்ற ஐந்து பிரிவுகளில், நாம் நாலாவது, ஐந்தாவது பிரிவுக்கு ஆளாகி, மிகவும் தாழ்வும், இழிவுமுள்ள ஈன மக்களாகி விட வேண்டியவர்களாகிறோம்.

இவை சட்டப்படியும், சமயப்படியும், சாஸ்திரப்படியும், அமுலில் இருந்துவரும் நடவடிக்கைக் கிரமப்படியும் நம்மைக் கட்டுப்படுத்திவிடுகின்றன என்பதோடு, இதை நாமே மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டவர்களாகவும், சகித்துக்கொண்டிருப்பவர்களாகவும் ஆகிவிடுகிறோம்.

அதுபோலவேதான் நாம் நம்மைப் பாரத புத்திரர் என்று சொல்லிக்கொள்வோமானால் இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் நான்கில் அல்லது ஐந்தில் ஒரு பங்கு விஸ்தீரணமுள்ள பெரிய நிலப்பரப்பையுடைய நாம், இந்தியாவின் சரிபகுதிக்கு மேற்பட்ட துறைமுகங்களையுடைய நாம், நம் நாட்டைப்பற்றிய, அதன் குறைகள், சுரண்டுதல் பற்றிய, கவலை எற்படமுடியாதவர்களாகி, மற்ற மாகாணக்காரர்கள் கொள்ளைக்கூட்டத்தார்போல் வந்து சகல துறை

களிலும் ஆதிக்கம் செலுத்திச் சொத்துக்களைச் சுரண்டிக் கொள்ளைகொண்டு போவதைப் பற்றியும் கவலை ஏற்பட முடியாதவர்களாகவும் ஆகிவிடுகிறோம்.

ஒரு வேளை, நமக்கு அக்கவலை ஏற்படுவதானாலுங் கூட, அதற்கு நம் எதிரிகளால் துவேஷ உணர்ச்சி என்று பழி சுமத்தப்பட்டு "தேசபக்த"க் கூட்டத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு விடுகிறோம்.

எப்படி யெனில், இப்போது, நாம் உண்மையிலேயே பார்ப்பனர்களை விட சமுதாயத்தில் கீழ்ப்பட்டவர்களாக யிருந்து, பழக்கம், வழக்கம், உரிமை, சலுகை ஆகியவை களில் வேறுபட்டிருந்துகொண்டு தாழ்த்தப்பட்ட நிலைமை யில் ஆழ்த்தப்பட்டிருப்பதை மாற்றிக்கொள்வதற்காக என்றே கவலைகொண்டு, நம் சமுதாயத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு நாம் செய்யும் முயற்சிக்கு இன்று வகுப் புத் துவேஷக்கூட்டம், வகுப்புத்துவேஷக் கட்சி என்று பெயரிடப்பட்டுத் தேசியத்திலிருந்தும் விலக்கப்பட்டு எப் படி அது சர்க்காராலுங் கூட அனுமதிக்கப்பட்டு விட் டதோ! அதுபோல் நாம் இந்தியர், பாரதபுத்திரர், இந்துக் கள், என்று சொல்லிக்கொண்டு திராவிட நாட்டுப் பாது காப்பை, நலனைப் பற்றிச் சிந்தித்தால் கண்டிப்பாக அது தேசத்துவேஷம், நாட்டுத்துவேஷம் கொண்ட கட்சி என்று பழி சொல்லப்பட்டுவிடும் என்பதோடு, நாமும் அலட்சியப்படுத்தப்பட்டவர்களாக ஆகிவிடுவோம் என்ப தில் ஐயம் இல்லை.

ஆகையினால்த்தான் சென்னை மாகாணத் திராவிட மக்களாகிய நாம் மேற்கூறிய மூன்று பெயர்களையும் நீக்கி

விட்டு நமக்குத் திராவிடர், திராவிட நாட்டவர், திராவிட சமயத்தவர், என்று சொல்லித் தீர்மானித்துக் கொண்டிருப்பதோடு, இந்தப்படியான திராவிட நாட்டைத் தனி நாடாக முழு சுதந்தரமுள்ள குடியரசு நாடாக ஆக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம்."

ஆகவே, திராவிடம் என்பது நம்முடைய நாட்டின் பெயர் என்றும், திராவிடர் என்பது இந்நாட்டிலுள்ள பழங் குடிமக்களது இனத்துக்கு ஏற்பட்ட சரித்திரப் பிரசித்திப் பெற்ற பெயராகும் என்றும், திராவிடர் கழகம் என்பது இந்நாட்டு மக்களின் நலத்திற்காக அமைத்துக் கொண்ட ஒரு இயக்கம் என்றும், சரித்திர ஆராய்ச்சி வாயிலாகவும், நமது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அறிவுரை வாயிலாகவும் தெளிவாக விளங்கிக் கொண்டோம்.

இனித் திராவிடர் கழகத்தின் இலட்சியமாகிய திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றித் தீவிரமாகக் கவனிக்க வேண்டியதே நம் கடமை.

இன்று பாகிஸ்தான் பிரிவினை வெற்றியடைந்து விட்டதற்குக் காரணம் அப்பிரச்னைக்குத் திராவிடநாட்டுப் பிரிவினையைக் காட்டிலும் அதிக முக்கியத்துவமோ, ஆதாரமோ, இருந்திருக்கலாம் என்பதல்ல. ஆனால், பாகிஸ்தான் பிரிவினையைக் கோரிய வடநாட்டு முஸ்லிம்கள், முஸ்லிம் லீகின் தலைவர் ஜனாப், ஜின்னாவிடம் பூரண நம்பிக்கையும், நிகரற்ற கட்சிக் கட்டுப்பாடும், இனஉணர்ச்சியும் ஒருங்கே பெற்று உள்ளும், புறமும் ஒரே கருத்துடன் விடாப்பிடியாகப் போராடி எத்தகைய தியாகத்திற்கும் கலங்காது முன் நின்றதே முக்கிய காரணங்களாகும் என்பதை ஒவ்வொரு திரா

விடனும் உடனே உணர்ந்து அதன்படி நடக்க முன்வரு வதை நமது பெரியார் ஈ. வெ. ரா. அறிவார்களாயின் அன்று தான் நேரடி நடவடிக்கையின் ஆரம்பதினமாகும்.

நாம் நமது திராவிடர் கழக மகாநாடுகளில் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றுகிறோமோ! அவைகளை அப் படியே நடைமுறையில் கையாளுவதின் மூலமேதான் நம் முடைய கட்டுப்பாட்டை பிறர் அறியச் செய்ய முடியும்.

முஸ்லிம்கள் மதத்தின் பெயரால் ஒரு கட்டுப்பாடான சமுதாயமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதையே ஜனப் ஜின்னு அரசியலின் பேராலும் பயன் படுத்திக் கொள்வ தற்கு இலகுவாக முடிந்து விட்டது. ஆனால், திராவிடர் களோ மதத்தின் பெயரால் பிளவுண்டு சிதைந்து விட்டனர். இத்தகைய நிலைமையிலுள்ள நம்மை திராவிடர் என்ற பெய ரால் மீண்டும் ஒன்று திரட்டவும் திராவிட நாட்டுப்பிரிவினை என்ற ஒரே அரசியல் சிந்தனையின் பேரால் திறமைவாய்ந்த கட்டுப்பாடுடையவர்களாக ஆக்கவும் வேண்டிய பெரும் பொறுப்பில் நமது பெரியார் ஈ. வெ. ரா. ஈடுபட்டுள்ளார். எனவே, ஒரு சிறந்த தீர்க்கதரிசியாகிய முஹம்மதுநபி செய்த வேலையையும், ஒரு பெரிய அரசியல் நிபுணராகிய ஜனப் ஜின்னு சாதித்த வேலையையும் நமது பெரியார் ஒருவரே ஏககாலத்தில் தன்னந்தனியே நின்று சாதிக்கவேண்டியவ ராக இருக்கிறார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அத்தகைய பெரும் பொறுப்பைச் சுமந்திருக்கும்நமது பெரியார் ஈ-வெ-ரா அவர்களை திராவிடர் கழகத்தின் தலைவ ராக மட்டும் பாவித்தால் போதாது, ஒரு சர்வாதிகாரியாக வும் பாவித்து அவர் அவ்வப்போது இடும் கட்டளைகளுக்

குக் கட்டுப்பாடுடன் கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய ஆர்வமும் ஆற்றலும் ஒவ்வொரு திராவிடன் உள்ளத்திலும் உதயமாக வேண்டும் என்றிருக்கும்போது, திராவிடர் கழக மாநாடு களில் நிறைவேறும் தீர்மானங்களையே அலட்சியம் செய்து நடப்பவர்களால் இயக்கம் வலுப்பெறுமா? இலட்சியம் கிட்டுமா? என்று சிந்திக்கவேண்டும்.

ஆம்! கருப்புச்சட்டை அணிய வேண்டும் என்பது திராவிடர் கழகத்தின் தீர்மானங்களில் ஒன்று. இதைத் திராவிடனென்றும், திராவிட நாட்டுப் பிரிவினை பெற்றே தீருவேனென்றும் கூறிக்கொள்ளும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் செய்கையில் நிறைவேற்றிக் காட்டவேண்டாமா?

கதர் உடை உடுத்தி விட்டாலே சுதந்திரம் கிடைத்து விடும் எனக் கருதி இட்ட கண்மூடித்தனமான கட்டளை போன்றதல்ல கருப்புச்சட்டை அணியச் சொல்வது!

கருப்பு நிறச்சட்டை அணிவதென்றால் மற்ற நிறச் சட்டைகள் அணிவது போன்று விருப்பமாகவோ! வெளி வேஷமாகவோ! மக்களுக்குத் தோன்றுது. காவி உடை தரிப்பது கூட கஷ்டமான காரியமல்ல! ஆனல், கருப்பு நிறச் சட்டை அணிவது மனதுக்குக் கஷ்டமான காரியந் தான்! நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் இருந்தா லொழியக் கருப்புச் சட்டை அணிய இயலாது.

கருப்புச்சட்டை அணிந்த திராவிடனே உண்மையான இனப்பற்றுடைய திராவிடனுகிறுன். தன் இனத்திற்குப் பரம்பரை பரம்பரையாக ஏற்பட்டுள்ள இழிவை இருதய பூர்வமாக வெறுப்பவனுகிறுன். அப்படி வெறுப்பவர்களில்

ஒருவனாகத் தன் உடைமூலம் உலகுக்குக் காட்டிக்கொள்பவனுமாகிறான். அதன் மூலம் மற்றத் திராவிடத் தோழர்களையும் அவ்வாறே தன்னைப் பின்பற்றுமாறு தூண்டுபவனுமாகின்றான்.

உண்மையிலேயே ஒரு திராவிடனுக்குக் கருப்புச் சட்டை அணியத் துணிவும் உணர்ச்சியும் வந்து விட்டால் அவனே திராவிடர் கழகத்தின் சிறந்த தியாகியும், தொண்டனுமாகிறான். மற்றவர்களோ அத்தகைய உண்மைத் தியாக உணர்ச்சியுள்ள தொண்டர்களைப் பயன்படுத்திக் கொண்டு அல்லது பலியிட்டு இயக்கத்தின் மூலம் சுய நலத்தைப் பெருக்கிக் கொள்ளும் துரோகிகளேயாவர். இனிமேல், அப்படிப்பட்டத் துரோகிகளைத் தெரிந்து எச்சரிக்கையாக நடந்து கொள்வதற்கே, முதன் முதலாகக் கருப்புச்சட்டை பயன்படும் என்று கருதலாம்.

ஆம், ஜனாப் ஜின்னாவோ அன்றி முஸ்லிம் லீக் முக்கியஸ்தர்களோ அரசியல் அதிகாரத்திற்கோ தனிப்பட்டவர்களின் செல்வாக்கிற்கோ ஆசைப்பட்டு லீக் தொண்டர்களைப் பயன்படுத்தி யிருந்தால், இன்று அவர்கள் பாக்கிஸ்தானை அடைந்திருக்க முடியுமா? ஆனால், நம் திராவிடப் பிரமுகர்களின் நிலைமை என்ன? ஒருவரை ஒருவர் (கழகக் கொள்கைப்படி நடக்கவில்லை என்று) பரிகசித்துக் கொள்ளக் கூடிய நிலைமையிலல்லவா இருக்கின்றது!

இந்தியாவினின்றும், திராவிட நாடு தனிநாடாகப் பிரிந்தாக வேண்டும் என்று டாக்டர் A. கிருஷ்ணசாமி வீரஉரை ஆற்றினார். ஆனால், அவருடைய நெற்றியிலுள்ள குறியையே, இங்கிலாந்துப் படிப்புக்குப் பிறகும், கலைக்க முடியவில்லையே

என்று காங்கிரஸில் பற்றுள்ள திருச்சி மாணவர்கள் பேசிக் கொண்டதாகவும் அம் மாணவர்களுக்கு "என்ன செய்யலாம் நண்பர்களே! நமது காலம் இப்படி எல்லாம்கூட ஆகிவிட்டது'' என்று கூறி ஆறுதல் அளிப்பதாகவும், 22-6-47-ந் தேதி "திராவிட நாடு" இதழில் ஒரு செய்தி வெளிவந்தது.

அதே இதழின் மற்றொரு செய்தியாவது: "திருச்சி திராவிடர் மாநாட்டில் தலைமை வகித்த முன்னாள் அமைச்சர் தோழர் எஸ். முத்தையா முதலியார் C. I. E. திராவிட நாட்டுப் பிரிவினைக்காகத் தீவிரமான நேரடி நடவடிக்கையில் ஈடுபடச் செய்ய எண்ணும் தலைவர், உடனடி நடவடிக்கையாக C. I. E. பட்டத்தை உதறித் தள்ளிவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்—திராவிடர் சார்பிலேதான்! உதறுவதும் சீக்கிரமாக நடக்க வேண்டும். இல்லையானால் பட்டம் கொடுத்த ஆட்களே கண்ணில் தென்பட மாட்டார்கள், அதாவது வெள்ளையர் வெளியேறு முன்பே! செய்வாரா? கேள்வி அல்ல. திராவிடர்களின் பெருமூச்சு!" என்றுகுறிப்பாக எழுதியதின் மூலம் உண்மையையே எடுத்துரைத்திருக்கிறார் ஆசிரியர் C. N. அண்ணாதுரை M. A. அவர்கள். ஆனால், திராவிடர்களின் 'தளபதி' என்று போற்றப்படும் அவர்மட்டும் ஏன் கருப்புச் சட்டை அணிவதில்லை? இதுவும் கேள்வியல்ல. உண்மைத் திராவிடர்களின் உள்ளக் குமுறல்களேயாம்.

நமது பெரியார் ஈ. வெ. ரா. கருப்புச் சட்டையின் அவசியத்தைப் பற்றிக் கூறும்போது பின் வருமாறு விளக்கியிருக்கிறார். "......திராவிட மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; ஒவ்வொரு ஊரிலுள்ள திராவிடர் கழக

முக்கியஸ்தர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திராவிட இயக்கக் கூட்டங்களில் பேசவரும் எவரும் கருப்புச் சட்டை அணியாதிருந்தால் அவர்களை மேடைமீது அனுமதியாதீர்கள். கருப்புச் சட்டை இல்லை என்று கூறினால் நீங்களாவது கொடுங்கள்.

எனக்குத் தெரியும் கருப்புச் சட்டை அணிவதால் எவ்வளவு நமக்குள் ஒற்றுமையும், உணர்ச்சியும் ஏற்படுகிறது என்று.

ஏதோ வைதீகக் கருத்துப் போன்று நான் கருப்புச் சட்டை அணிந்தாக வேண்டுமென்றோ, அல்லது பிடிவாதத்தினாலோ கூறவில்லை. நாம் கருப்புச் சட்டை அணிந்து போவதைக் காணும்போது பார்ப்பனீயம் பதறுகிறது. ஆகவே நமக்குள் இனியாவது கட்டுப்பாடு வேண்டும் என்பதை வலியுறுத்தவே இவ்வளவு கண்டிப்பாக நான் கூறவேண்டியிருக்கிறதற்கு வருந்துகிறேன். அதுமட்டுமல்ல போராட்டத்தில் இறங்குவதற்கு நாம் நமது இயக்கத்திலுள்ள சமய சஞ்சீவிகளை வெளியேற்றவே இனி கட்டுப்பாட்டை வலியுறுத்த வேண்டியிருக்கிறது.''

ஆகவே, நமது திராவிடர் கழகத்தின் இன்றைய வேலை திராவிடர்களுக்குள் அசைக்கமுடியாத நிரந்தரமான ஒற்றுமையையும், கட்டுப்பாடான நடவடிக்கைகளையும் முதற்கண் சாதிப்பதாகும். பிறகுதான், நாம் நமது இலட்சியமாகிய திராவிட நாட்டுப் பிரிவினையை அடைவதற்குரிய நேரடி நடவடிக்கைகளைத் தொடங்கமுடியும். இதற்கிடையில் நமது கேரள, கன்னட, ஆந்திர, துளுவத்திராவிடர்களுடன் நேரடியான இயக்கத் தொடர்புகள் ஏற்படுத்திக்கொண்டு

ஆங்காங்கு கிளைக் கழகங்களை அமைக்கவும் பிரச்சாரங்கள் செய்யவுமாகிய முக்கியமான முயற்சியில் மிகவும் அவசரமாக வும், தீவிரமாகவும் ஈடுபடவேண்டும்.

இவ்வளவு காலமாகக் காங்கிரஸ் வலையில் சிக்கித் தேசிய மெனும் மது மயக்கத்தில் இன உணர்ச்சியை மறந்து கிடந்தவர்களுக்குங்கூட பாக்கிஸ்தான் பிரிவினையினால் ஓரள விற்கு மயக்கம் ஒழிந்து இன உணர்ச்சியும், தனியரசில் ஆவலும் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை அறிகிறோம். ஆத லால், இந்தச்சமயத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேசியவாதிகளுக்கும்ஆரியர்களால் ஏற்பட்டுள்ள இழிவுகளையும், வடநாட்டார்களுடைய இந்துஸ்தான் ஆட் சியால் தென்னாட்டிற்கு (திராவிட நாட்டிற்கு) ஏற்பட இருக் கும் கேடுகளையும் பற்றித் தமிழகத்தில் செய்த பிரச்சாரங் களைப் போல் பன்மடங்கு அதிகமாகக் கேரள, கன்னட, ஆந்திர, துளுவ மொழிப் பிரச்சாரகர்களை ஏராளமாக நிய மித்துத் துரிதமான பிரச்சார வேலைகளிலும் இயக்க ஆக்க வேலைகளிலும் ஈடுபடவேண்டும். ஆந்திர, கன்னட, கேரள, மொழிகளில் வாரப்பத்திரிகைகளேனும் நடத்த வேண்டும். அவ்வப் பிரதேசங்களில் உள்ள தலைவர்களுடன் கடிதப் போக்கு வரத்துகள் செய்வதின் மூலம் நமது நோக்கங்களை விளக்கிக் கூறியும் அவரவர்கள் நோக்கங்களை அறிந்தும், அவைகளுக்குத் தகுந்தபடியாக நம் கழக நடவடிக்கைகளைத் துரிதப் படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிர மாகவும், அவ்வளவுக்கு அதிகமாகவும் கேரள, கன்னட, ஆந்திர, துளுவ, தமிழகக் கருப்புச்சட்டைப்படைத் தொண் டர்களை ஆங்காங்கு உண்டாக்கி ஓர் அரிய கட்டுப்பாடான

அமைப்பு முறையில் கண்காணித்துக் கொள்ளத் தகுந்த ஏற்பாடுகளும் செய்து முடித்தல் வேண்டும்.

இவைகளுக்கெல்லாம் ஆரம்ப முயற்சியாக ஓர் அகிலத் திராவிட மாநாடு நடத்துவதற்கு வேண்டிய அடிப்படையான வேலைகளைத் துரிதமாகச் செய்து மாநாடும் நடத்த வேண்டும். அம் மாநாடு நடத்துவதற்குப் பொதுவான இடம் சென்னை நகரமாக இருப்பது இயல்பு. அத்தகைய மாநாட்டிற்கு ஏராளமான கேரள, கன்னட, ஆந்திர, துளுவ தமிழக மக்களும், பிரதிநிதிகளும் வருவதற்கு வேண்டிய எல்லாவகையான முயற்சிகளும் செய்து அம் முயற்சியில் ஓரளவு வெற்றியேனும் பெறவேண்டும்.

வெற்றி பெற்ற அகிலத் திராவிட மாநாட்டில், திராவிட நாட்டுப் பிரிவினை பெறுவதற்கு எவ்வாறு முயற்சிப்பது, பிரிந்த திராவிடத்திலுள்ள தமிழக, கேரள, கன்னட, ஆந்திர, துளுவநாடுகளின் தனித்தனியான குடியரசு உரிமைகளுக்கும் கூட்டுறவுக்கும் பங்கமில்லாத சிறந்த அரசியல் முறையில் "ஐக்கிய திராவிடம்" (**United States of Dravidam**) என்பதை அடைவதற்கான சட்ட திட்டங்களைத் தெளிவாகவும் உறுதியாகவும் தீட்டி ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அத்தீர்மானத்தின்படி உறுதியாக நடப்பதற்கறிகுறியாக அகிலத் திராவிடர்களும் கூடிய அம் மாநாட்டிலே ஒரு பிரமாணிக்கத் தீர்மானமும் செய்து கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய நடவடிக்கைகளைச் சாதிப்பதின் மூலமே திராவிடர் கழகம் அகில உலக மக்களின் கவனத்தைக் கவரவும், இந்துஸ்தான் ஆதிக்கத்திலிருந்து திராவிடநாடு,

தனி நாடாகப் பிரியவும், பிரிந்த திராவிடம், ஐக்கிய திராவிட குடியரசாக விளங்கவும் முடியுமேயல்லாது, வேறு வழிகளெல்லாம் வீண் பொழுது போக்குகளே என்பதை ஒவ்வொரு உண்மைத் திராவிடனும் உணர்ந்து கொண்டு அதற்காவன செய்யுமாறு திராவிடர் கழகத் தலைவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

# 8. பிரிவினையும் ஐக்கியமும்

நாம் இதுவரையிலும் ஆராய்ந்து வந்த சரித்திர சம்பந்தப் பட்ட சம்பவங்களிலிருந்து இன்றைய அரசியல் நிலைமை வரைக்கும் ஏற்பட்டுள்ள இந்திய உபகண்டத்தின் வரலாற்றால் உணர்ந்து கொள்ளக் கூடிய முக்கியமான, மறுக்க முடியாத பிரச்னையாக விளங்குவது என்ன ?

ஆதிகாலத்தில், இந்திய உபகண்டம் முழுவதும் பரவியிருந்த திராவிடர்கள் ஆங்காங்கு தனித்தனிக் குடியரசுகளோடு விளங்கினர்கள். இந்திய உபகண்டத்திற்கு வெளியிலிருந்து வந்த ஆரியர்களும், மற்றவர்களும் கள்ளங்கபடற்ற திராவிடர்களின் தனியரசுகளைச் சிதைத்து ஓரே ஏகாதிபத்திய சாம்ராச்சியம் அமைப்பதற்காக முயற்சி செய்திருக்கின்றனர். அம் முயற்சியினால், அவர்களுக்குள்ளேயே, அடிக்கடி யுத்தங்கள் மூண்டு ஓரே அரசு அல்லது ஏகாதிபத்தியம் அடிக்கடி தோன்றி மறைந்தன.

கடைசியாக ஆங்கிலேயர்கள் அந்நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, இந்திய உபகண்டத்தைக் கொஞ்சமும் தயங்காது எவ்வளவு அதிகமாகப் பிரிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பிரித்துத் தனித்தனியான சுதேச மன்னர்

களை ஏற்படுத்தி விட்டுத் தம் சுரண்டல் வேலைகளைச் சுமார் இரண்டு நூற்றாண்டு காலமாக, வெகு சுலபமாகச் சாதித்து வந்திருக்கின்றனர். சுதேச மன்னர்களும் (சமஸ்தானாதி பதிகள்) ஆங்கிலேயரிடம் நன்றியறிதலோடு நடந்துகொண் டிருக்கின்றனர். மக்களை வேறு வழியில் ஆங்கிலேயரைக் காட்டிலும் அதிகத் தீவிரமாகச் சுரண்டிக் கொண்டும், இழிவு படுத்திக் கொண்டும் இருந்த ஆரியர்கள் மதத்தின் பேரால் ஆங்கில ஆட்சியால் பாதுகாக்கப்பட்டு வந்ததற்காக ஆரியர்களும் ஆங்கிலேயரிடம் மிகமிக நன்றியறிதலுள்ள ஊழியர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

இத்தகைய நிலைமையை ஒழித்து இங்குள்ள பல்வேறு இனங்களின் நலன்களுக்காக இந்திய உபகண்டத்தின் விடு தலைப் போராட்டம் தொடங்கப்பட்டது. அப் போராட்டத் தின் வளர்ச்சிக்குக் காந்தீயத்தினால், இடையூறு சம்பவித் ததை உணர்ந்த, இனத் தலைவர்கள் தனித்தனியே பிரிந்து தத்தம் புதிய இயக்கங்களின் மூலம் ஆரியத்தையும், காந்தீ யத்தையும், பிரிட்டானியத்தையும் எதிர்த்துப் போராடும் படி நேர்ந்தது. நாளடைவில் வலிமையுற்ற உண்மையான போராட்டங்கள் வெற்றியடைந்தன. காந்தீயமும், ஏகாதி பத்தியமும், வீழ்ச்சியுற்றன. பாக்கிஸ்தான் பிரிவினை எல் லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டுவிட்டது.

ஒரு காலத்தில் பர்மாப் பிரிவினையை எதிர்த்த காங்கி ரஸ் கண்மூடிகளே, பாக்கிஸ்தான் பிரிவினையையும் எதிர்த் தனர். இந்திய உபகண்டத்தில் நடந்த ஏகாதிபத்திய சாம் ராச்சிய ஒட்டுமொன வேலைகளுக்கு ஆங்கிலேயர் காலத்தில் பலியான நாடுகளில் பர்மாவும் ஒன்று.

1826-ம் ஆண்டில் பர்மா இந்தியாவுடன் இணைக்கப் பட்டு, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப் பட்டு, 1937-ம் ஆண்டு வரையில் மத்திய சர்க்காரின் ஏகாதி பத்தியத்திற்குக் கட்டுண்டிருந்தது. அக்காலத்தில், பர்மா விலும் அகில இந்தியக் காங்கிரஸின் ஆதிக்கமும், காந்தீய மும் பரவியிருந்தது. பர்மாவிலுள்ள பௌத்த பிக்ஷுக் கள் கூடக் காங்கிரஸில் தீவிரமாகக் கலந்திருந்தனர். அப் போது அங்கும் பர்மா மாகாணக் காங்கிரஸ் கமிட்டி என் றொன்றிருந்து காங்கிரஸ் மேலிடத்து உத்தரவுப்படியே நடந்துவந்தது. அக்கமிட்டியும், அகில இந்தியக் காங் கிரஸுமே பர்மாப் பிரிவினையை மிகவும் பலமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவைகளாகும்.

ஆனால், உண்மையான பர்மிய இன உணர்ச்சி உள்ள வர்கள், இந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சர்க்காராலும், மக்களாலும் பர்மா சுரண்டப்படுவதை உணர்ந்து "பர்மா பர்மியருக்கே" என்ற முழக்கத்துடன் தீவிர கிளர்ச்சியில் இறங்கினர் இரத்தம் சிந்திய பிறகே, பர்மாப் பிரிவினையும் வெற்றி பெற்றிருக்கிறது.

பர்மாப் பிரிவினையைப் பலமாக எதிர்த்து வந்த காங்கிரஸ், பர்மா பிரிக்கப்படும்போதும், பிரிவினை நடந்த பிறகும் யாதொரு புரட்சியும் செய்யாமல் பராமுகமாக இருந்துவிட்டது. அம்முறையையே பாக்கிஸ்தான் பிரி வினையின் போதும் காங்கிரஸ் அனுஷ்டித்திருக்கிறது.

காங்கிரஸ் பொறுப்பற்ற விதமாகவும், கண்மூடித்தன மாகவும் நடந்துகொண்டமையால் பர்மாப் பிரிவினை காலத் தில் மக்கள் சிந்திய இரத்தத்தைக் காட்டிலும் பன் மடங்கு

அதிகமாகப் பாக்கிஸ்தான் பிரிவினை காலத்தில் இரத்தம் சிந்தவும், லட்சக் கணக்கான மக்களின் உயிரும், பொருளும் சேதமடையவும் நேர்ந்தது.

காங்கிரஸின் அத்தகைய பலாத்காரமான செயலால் ஒரே அரசை அமைக்க முடிந்ததா? பாக்கிஸ்தான் பிரிவினையை ஒத்திப்போடவாவது முடிந்ததா? எனவே, பாக்கிஸ்தான் பிரிவினையைக் காங்கிரஸ் ஆரம்பத்திலேயே அரசியல் ஞானத்தோடு அங்கீகரித்திருந்தால், மக்களுக்குள் இவ்வளவு உயிர், பொருள் சேதமும், பகைமையும் ஏற்படாததோடு, பிரிந்த பர்மாவிலிருந்து ஆசியா மக்களின் மாநாட்டிற்கு வந்த பர்மியத் தலைவர் அவுங்சானும், பிரிக்கக் கூடாது என்று கிளர்ச்சி செய்த காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக்கொண்டது போன்ற முறையில் ஜனுப் ஜின்னுவும், பண்டித ஜவஹர்லால் நேருவும் ஒருவரோடொருவர் உள்ளப் பூர்வமாகக் கலங்கமற்று அளவளாவி வாழ்வதற்கும் முடியுமல்லவா?

ஏன்! நாளை அவ்வாறு தானே இந்துஸ்தான் குடியரசுத் தலைவர் என்ற முறையில் பண்டித ஜவஹர்லால் நேருவும், பாக்கிஸ்தான் குடியரசுத் தலைவர் என்ற முறையில் ஜனுப் ஜின்னுவும் ஒருவரை யொருவர் அன்போடும், அவசியத்தோடும் ஆலிங்கனம் செய்து அளவளாவி அரசாளப் போகின்றனர்.

ஐக்கியம், பிரிவினைக்குப் பிறகுதான் ஏற்பட முடியும் என்பதற்கு இதை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டியிருக்கிறது? இந்தியா முழுவதையும் ஜனுப் ஜின்னுவே

வேண்டுமானாலும் ஆளட்டும் என்று கபடவார்த்தை கூறிய காந்தியார் ஜனப் ஜின்னாவைக் கட்டித் தழுவிக்கொண்டும் நின்றார் (புகைப் படம் பிடிப்பதற்காக) என்றாலும், ஐக்கிய மனப்பான்மை ஏற்பட முடியவில்லை யல்லவா?

"இந்தியா முழுவதும் ஜனப் ஜின்னாவே வேண்டுமானாலும் ஆளட்டும். ஆனால், தேசத்தைப் பிளப்பது மட்டும் கூடாது." பாரதமாதாவை வெட்டுவதா? பசுவைக் கொல்லுவதா? சிசுவை அறுப்பதா? என்றெல்லாம் பசப்பியக் காங்கிரஸ்காரர்களின் வார்த்தைகள் வெறும் பித்தலாட்டகரமான பேச்சுகளே என்பதை அவர்களே தத்தம் வாயால் இன்று நிரூபித்து விட வில்லையா?

ஆம், அவர்கள் அன்று இந்திய உபகண்டத்தை இரண்டு பிரிவுகளாகக் கூட ஆக்கலாகாது என்பதற்காகவே அவ்வாறு கூறினர்.

முஸ்லிம் லீக் கேட்ட பாக்கிஸ்தான் இரண்டு தனிப்பட்ட பிரதேசங்களே யாகும். ஒன்று மேற்கே யுள்ள பஞ்சாப், சிந்து, பலூச்சிஸ்தான், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், காஷ்மீரம் முதலியன அடங்கிய மேற்குப் பாக்கிஸ்தான். மற்றொன்று கிழக்கே யுள்ள வங்காளம், அஸ்ஸாம் ஆகிய பிரதேசங்கள் அடங்கிய கிழக்குப் பாக்கிஸ்தான் இவை இரண்டையும் ஒன்றாக இணைக்கும் ஒரு நீண்ட பாதை; அவ்வளவேதான்.

ஆனால், இன்று அப்பாரத மாதாவின் பாதுகாப்பாளர்கள், பசுவை வெட்டாதவர்கள், சொல்வதென்ன? பஞ்சாப்பை இரண்டு துண்டாக்க வேண்டும்; இந்துக்களும், சீக்கியர்களும் பெருவாரியாக வாழும் பஞ்சாப்பை ஒரு

பகுதியாகவும், முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும் பஞ்சாப்பை மற்ருெரு பகுதியாகவும் பிரித்துவிடவேண்டுமாம். ஏனென்ருல், அந்தந்த இன மக்கள் தத்தம் இன அரசின் கீழ் அப்போது தான் சுகமாக வாழ முடியும். பஞ்சாப் ஓரே முஸ்லிம் மாகாணமாக இருந்தால் முஸ்லிம் மெஜாரிட்டி ஆட்சிதானே நடைபெறும் அவ்வாட்சியில் இந்துக்களும் சிக்கியர்களும் ஏன் கட்டுப்பட் டிருக்கவேண்டும்? என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி திட்டம் தீட்டியிருக்கிறது. அதுபோலவே, வங்காளப் பிரச்னையும் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸிலுள்ள ஏகாதிபத்திய வாதிகள் தங்கள் எண்ணம் பலிக்காது என்ற கடைசிக் கட்டத்தை அடைந்த பிறகுதான் உண்மைக்கு மதிப்பளிக்க முன்வருகின்றனர். அதுவும் மற்றவர்களுக்கு எவ்வளவு கேடுகள் விளைவிக்க முடியுமோ அவ்வளவையும் விளைவித்த பிறகுக் கொஞ்சமும் தயக்கமின்றித் தங்கள் கொள்கைகளைத் தலைகீழாக மாற்றிக் கொள்கின்றனர். அத்தகைய அற்புதப் பிறவிகளினல் இந்திய உபகண்டம் இன்னும் என்னென்ன கேடுகளை அடையப் போகின்றதோ! பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நாம் அப்படியும் வெகு காலம் பொறுத்திருக்க வேண்டியதில்லை. திராவிட நாட்டுப் பிரிவினையோடு காங்கிரஸிலுள்ள ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஒரு முடிவான கட்டத்தை ஏற்படுத்தி விடவேண்டும்.

திராவிடர் கழகம் கோரும் திராவிட நாட்டுப் பிரிவினையைப் போன்ற, பிரிவினைக்குள் பிரிவினை (கேரளம், தமிழகம், ஆந்திரம், கன்னடம், துளவம்) ஏற்பட்டாலும்!

இவைகள், ஓர் ஐக்கிய திராவிடமாக விளங்குவதற்குப் போதிய ஆதாரங்களும், ஒற்றுமைகளும் இருக்கின்றனவேயொழிய பகைமைக்கோ, பிளவுக்கோ திராவிடத்தில் ஒரு சிறிதும் இடமே இல்லை. ஆனால், வடநாட்டுக் காங்கிரஸ் ஏகாதிபத்திய வாதிகளாகிய பனியாக்களுக்கும், டாடா, டால்மியா, பஜாஜ், பிர்லா முதலிய பணக்காரக் கும்பல்களுக்கும் இனி, வடநாட்டிலுள்ள பாக்கிஸ்தான் பிரதேசங்களில் சுரண்டுவதற்கு இடமில்லாமையால், நமது திராவிட நாட்டை மார்க்கட்டாக ஆக்குவதற்குத் திட்டம் போட்டு இங்குள்ள ஆரியர்களின் உதவியால் நமக்குள் பிளவுகள் உண்டாகும்படியான வேலைகளைத் தீவிரமாகச் செய்யத் துணிவார்கள். ஆதலால், அம் முயற்சிக்கு இடங்கொடாமல் திராவிடர் அனைவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து கிளர்ச்சி செய்து திராவிட நாட்டுப் பிரிவினையைப் பெற்றே தீரவேண்டும்.

ஆகவே, காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! நீங்கள் உங்கள் தாய் நாட்டிற்கு எப்போதாகிலும் உண்மையான தொண்டு செய்யவேண்டும் என்று மனப்பூர்வமாகக் கருதி இருப்பீர்களேயானால், அதை உடனே நிறைவேற்ற வேண்டிய காலம் இதோ வந்துவிட்டது. இனிமேல், உங்களுக்கு அகில இந்தியக் காங்கிரஸில் வேலை இல்லை. இதுவரையில், திராவிட நாட்டிற்கு உங்கள் அறியாமையால் நீங்கள் செய்து வந்த துரோகச் செயல்களுக்கு மன்னிப்பு வேண்டுமானால், உடனே இந்துஸ்தான் A. தொகுதியின் தொடர்பைத் துணிவுடன் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும், திராவிட நாட்டுப் பிரிவினைப் புரட்சியில், உண்மையான தியாகத் தீயில் குதிக்க ஆயத்தமாகுங்கள்.

இப்போது, அகில இந்தியக் காங்கிரஸ் தனது "அகில இந்திய" என்ற பெயரை மாற்றி "மீதி இந்திய" என்றும், A. B. C. என்ற பிரிவினைகளையும் ஏற்றுக் கொண்டு விட்டதென்பதை ஒவ்வொரு காங்கிரஸ் திரா விடனும் உணரக்கூடும்.

காங்கிரஸின் இன்றைய பிரச்சினை பாக்கிஸ்தான் பிர தேசங்களாகிய B. C. பிரிவுகளின் அளவைக் குறைப்பதும், இந்துஸ்தான் பிரதேசமாகிய A. பிரிவின் அளவைப் பெருக்குவதுமே யாகும். அதாவது, முடிந்த அளவுக்கு இந்துஸ்தான் சாம்ராச்சியத்தை ஏற்படுத்திப் பிற நாட்டா ரின் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற ஏகாதிபத் திய எண்ணத்தின் வேலைத்திட்டமே யாகும். எனவே, இந்தச் சமயத்தில் நாம் நமது திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினையைக் கவனிக்காவிட்டால் நமது நாடும் A. தொகுதி யில் இணைக்கப்பட்ட அடிமை நாடுகளில் ஒன்றாக ஆகிவிடு மல்லவா? அதற்குச் சம்மதித்துக்கொண்டிருந்து விட்டால் நம்முடைய சுதந்தரம் வெள்ளையர் கையிலிருந்து மாறி வட நாட்டார் கைக்குச் சென்றுவிட்டது என்பதைத் தவிர நமக்கு உண்மையான விடுதலையோ, சுதந்தரமோ கிடைத்து விட்டதாகுமா?

காங்கிரஸ் மேலிடத்து (வடநாட்டு) அதிகாரத்தால் எத்தனையோ தடவைகள் மூக்கறுபட்டும், தன் மானம் இழந்தும் தவியாய்த் தவித்த காங்கிரஸ் திராவிடத் தோழர் களே! வட நாட்டார் கைக்கு அரசாட்சியே வந்துவிட் டால், உங்கள் நிலைமை என்னாகும் என்பதையேனும் சிந்தித் திருக்கிறீர்களா? உங்கள் உடலில் ஓடுவது உண்மையான

திராவிட இரத்தமில்லையா? நீங்கள் திராவிட மன்னர்களின் சந்ததிகளில்லையா? வட நாட்டாரின் கைக்கூலிகளாய் விளங்குவதற்கு உங்களுக்கே வெட்கமாக இல்லையா? உங்கள் நாட்டுச் சரித்திரத்தையாவது நீங்கள் படித்ததுண்டா? இல்லையானால், இந்நூலில் ஓரளவுக்கேனும் விளக்கியிருக்கும் சரித்திரக் குறிப்புகளிலிருந்தேனும் உண்மையை உணர்ந்து இனப்பற்றுடன் நாட்டுத் தொண்டு செய்யவேண்டும், என்ற இலட்சியத்தை அடைய மாட்டீர்களா?

இந்திய உபகண்டம் எந்தக்காலத்திலுமே ஓரே அரசாக இருந்தது மில்லை, இருக்கவு மில்லை, இனிமேல் இருக்கப் போவது மில்லை என்பதற்குச் சரித்திரத்தைத் துருவித் துருவி ஆராயவேண்டியதில்லை. அதுதான் இந்திய உபகண்டத்தின் வரலாற்றுகளிலேயே மிகவும் தெளிவாக, நிலை பெற்ற நிச்சயமான உண்மையாக இருக்கிறது.

ஓரே இந்தியா, ஓரே அரசு என்று கனவு கண்ட எத்தனையோ ஏகாதிபத்திய வாதிகளின் எண்ணங்கள் இடிந்து தகர்ந்து விட்ட பிறகுங் கூடப் பகற் கனு உலகில் வசிக்கும் காங்கிரஸ் பக்தர்களே! உங்கள் கடைசிக் கனவும் கலைந்த பிறகுதானே, திராவிடர் கழகம் உங்களை இருதயப் பூர்வமாக அழைத்துக்கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் திராவிடா! எங்கள் அழைப்படை ஏற்று ஐக்கியத் திராவிடம் அமைப்பதற்கு ஓடிவரத் தாமதமேன்? நம்மை நாமே ஆள்வதற்குத் தயக்கமா? வட நாட்டான் ஆட்சியில் அடிமையாக இருக்கத்தான் விருப்பமா?

இன்று, சமஸ்தானாதிபதிகளின் தனியரசுப் பிரச்சினையும் கிளம்பிவிட்டது. 70 லட்சம் மக்களையுடைய திரு

வாங்கூர் கூடத் தனி சுதந்தர நாடாகப் பிரகடனம் செய்து விட்டது. ஹைதராபாத்தும் சுதந்தரப் பிரகடனம் செய்திருக்கிறது. மற்ற சமஸ்தானங்களும், கூடிய சீக்கிரம் விழிப்படையக்கூடும்!

நாளை, ஜார்கண்டு பிரதேசங்களிலுள்ள ஆதிவாசிகள் எனும் மக்கள் தங்கள் பிரதேசங்களைத் தனிச் சுதந்தர நாடாகக் கோரிக் கிளர்ச்சி செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவைகளை எல்லாம் ஏற்கனவே அறிந்தே இந்திய உபகண்டத்தை எவ்வாறு சிறந்த முறையில் பிரிவினைகள் செய்யலாம் என்பதற்கு லாகூர் "ஈஸ்டர்ன் டைம்ஸ்" ஓர் நல்ல வழி காட்டியிருக்கின்றது. அதன் விவரமாவது:

(1) "பஞ்சாப், சிந்து, பலூச்சிஸ்தான், வட மேற்கு எல்லைப்புற மாகாணம், காஷ்மீரம் ஆகிய ஐந்து பிரதேசங்கள் அடங்கிய மேற்குப் பாக்கிஸ்தான் நாடும்; வங்காளம், அஸ்ஸாம் ஆகிய பிரதேசங்கள் அடங்கிய கிழக்குப் பாக்கிஸ்தான் நாடும் முஸ்லிம் இனத்தின் தேசீயத் தாயகமாகத் தனிச் சுதந்தர நாடுகளாக அமையவேண்டும்.

(2) ஐக்கிய மாகாணம், பீஹார், மத்திய மாகாணம், பம்பாய் ஆகிய நான்கு பிரதேசங்கள் அடங்கிய இந்துஸ்தான் தனிச் சுதந்தர நாடாக அமைய வேண்டும்.

(3) சோட்டா நாகபுரி, கிழக்கு ஸ்டேட்ஸ், ஏஜென்ஸி பிரதேசங்கள் அடங்கிய ஜார்கண்டு நாடு ஆதி

வாசிகளின் (மலைவாசிகள்—பழங்குடிகள்) சுதந்தரத் தாயகமாக அமைய வேண்டும்.

(4) திராவிடநாடு (சென்னை மாகாணம்) தென் இந்தியத் திராவிடர்களின் —பிராமணரல்லாதாரின்— தனிச் சுதந்தரத் தாயகமாக அமையவேண்டும்.

(5) சமஸ்தானாதிபதிகளின் பிரதேசங்கள் தனிப்பட அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஐந்து வகையான தனிச் சுதந்தரநாடுகளாக அமையும் நாடுகள். ஒரு கூட்டு ஐக்கியமுன்னணி ஏற்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, இந்தியாவிலும், சமஸ்தானங்களிலும் உள்ள எல்லா மக்களுடைய சுதந்தரம், உரிமைகள், முதலியவற்றைப் பாதுகாப்பதற்காகவும், பிற தொல்லைகள் ஏற்படாமல் கூட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்தி வைத்துக்கொள்வதற்காகவும், இந்தியாவின் மேற்படி சுதந்தர நாடுகளும், சமஸ்தானங்களும், தாங்களே சுயமே மனப்பூர்வமாகச் சேர்ந்துக் கொள்ளும் வகையில் ஒரு கூட்டு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும்." என்பதாகும்.

ஆகவே, காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! நாம் பிறந்து, வளர்ந்து, வாழ்கின்ற திராவிட நாட்டின் சுதந்தரத்தை அடைவதற்காக இனியாவது ஒன்றுகூடிப் புரட்சி செய்வோம் வாரீர்! நாம், A. தொகுதியிலிருந்து உடனே பிரியவேண்டும். இன்றேல், நமது சமுதாயப் பொருளாதாரத், தொழில் துறைகள் முற்றிலும் பாழாகி விடும். முன்னேற்றம் என்பதும் முயல் கொம்பாகி விடும், என்பதைக் காந்தியாரின் மில் ஒழிப்புத் திட்டத்தை திராவிட நாட்டில்

மட்டும் கண்டு கலங்கியதின் மூலம் ஓரளவுக்காவது உணர்ந்தவர்களும் பிறகு கவலையற்று இருப்பது அறிவுடைமையாகுமா? வருமுன் காப்பதன்றோ அறிஞர் கடன்! ஒரு முறைக்குப் பல முறைகள் அநுபவித்தும் அலட்சியமாக இருப்பதோ இவ்வளவு காலமாக நீங்கள் கற்ற அரசியல் வித்தையின் பலன்?

காங்கிரஸ் திராவிடர்களே! நீங்கள் வட நாட்டாருக்கு அடிமையாகவே இருந்து பழக்கப்பட்டு, அடிமைத்தன்மையே உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருப்பதால், அவ்வடிமைத்தனத்திற்குப் பெயர் "ஐக்கிய இந்துஸ்தான்" என்று கூட எண்ணிக் கொண்டிருத்தல் கூடும்! ஆனால், அவ்வெண்ணமும் வீண் மனக்கோட்டை என்பதை உங்களுக்கு இப்போதே எச்சரிக்கை செய்து விடுகிறோம்.

சமத்துவமான பொருளாதாரத் தொழில் துறைகள் அற்ற நீங்கள், ஏராளமான தொழிற் சாலைகளும், நிதிக் குவியல்களும் படைத்து உச்ச நிலையில் விளங்கும் வடநாட்டாருக்கு அடிமையாக இருக்க நேரிடுமே யொழிய, ஐக்கியமாகவோ, சமத்துவமாகவோ ஒருபோதும் இருக்க முடியாது என்பது உறுதி. பிறகு, உங்கள் மதியீனத்தால் உங்களைச் சுரண்டி வாழும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கொடுமையைத் தாங்காமல் நீங்களே அவர்களை எதிர்த்துப் புரட்சி செய்ய வேண்டிய காலமும் மறுபடியும் வரலாம்! அப்போது வறுமையால் வாட்டப்பட்டு, ஆரியத்தால் அடக்கப்பட்டு வடநாட்டு ஆட்சியால் நசுக்கப்பட்டிருப்பீர்கள்! எனவே, உங்கள் நிலைமை அன்று இன்றைக்கு இருப்பதைவிட மிக மிகக்கேவலமாகவே இருக்க நேரிடும் என்பதற்கு ஐயமில்லை

இவ்வுண்மையை இன்றே உணருங்கள், எதிர்காலத்தை எண்ணுங்கள். உங்கள் பிற்காலச் சந்ததிகளின் சுகவாழ் விற்காகத் திட்டம் தீட்டுங்கள் இன்று உங்கள் கண்முன் வெறும் பொட்டலாய்க் காட்சியளிக்கும் திராவிட நாட்டை யும் பாருங்கள், அதே கண்களால் இந்துஸ்தானத்தையும் அங்கே சுழலும் யந்திரக் கோட்டைகளையும், எண்ணற்ற பணமூட்டைகளையும் பாருங்கள். பார்த்துப் பார்த்து மனம் பதறியதால்தான் அங்கு பாக்கிஸ்தான் ஏற்பட்டு விட்டது! பாராமுகமாக நாம் இருப்பதாலன்றோ திராவிட நாட்டுப் பிரிவினை பெறுவதற்குத் திண்டாட்டமாக இருக் கிறது ? தோழர்களே! இந்துஸ்தான் ஆட்சியில் இந்துஸ் தான் வளம் பெறும், பாக்கிஸ்தான் ஆட்சியில் பாக்கிஸ்தான் செழிப்புறும். திராவிடநாடு செழிப்புறத் திராவிடர் ஆட்சி வேண்டாமா? சிந்தனை செய்து பாருங்கள்!

மேலும், பிரிவினையினுல்தான் தனித்தனியான வல்லரசு கள் சம பலத்துடனும் சமத்துவத்துடனும் இருக்க முடியும் அப்போதுதான் உண்மையான ஐக்கியமும் ஏற்பட முடிய லாம்! ஐக்கியக் கூட்டுறவுகள் நீடித்தும், நிலைத்தும் இருக்க வேண்டுமானுல் ஏகாதிபத்திய மனப்பான்மை ஒழிந்துதான் தீரவேண்டும். உண்மையிலேயே ஏகாதிபத்தியம் ஒழிந்து விட்டதென்ருல், இன அரசுகள் தனித்தனியே சுதந்தரத் துடன் செழித்து ஓங்கவேண்டும். இதுதான் பிரிவினையி ணுல் ஏற்படும் ஐக்கியத் தத்துவமாகும். இத்தத்துவத்தின் வளர்ச்சியே அகில உலகப் பொதுவுடைமை ஆட்சிக்கு அடிப்படையுமாகும்.

கடைசியாக, நமது திராவிடத்தின் ஒரு பிரிவாகிய தமிழரசின் சார்பாகத் திடீரென்று உதித்திருக்கும் போலி

முரசொலிகளைப் பற்றி நமது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை ஞாபகப் படுத்திக் கொண்டு இந்நூலை முடித்து விடுவோமாக.

"கடந்த நான்கு ஆண்டுகளாக மக்களிடையே ஏற்பட்டு வரும் இனஉணர்ச்சியும், அதன் மூலம் பார்ப்பனீயத்திற்கு நாட்டில் ஏற்பட்டுவரும் எதிர்ப்பையும், பார்ப்பனர்களின் ஏமாற்று வித்தைகள் நாட்டில் செல்லுபடியாகாது போகும் நிலைமையையும் கண்டபின்னர் ஆரியர்கள் திராவிடர்களில் ஒரு சிலரைப் பிடித்து 'தமிழர்' என்ற பெயரால் ஆரியர்களுக்குப் பாதுகாப்பைத் தேடி வருகின்றதோடு, திராவிடர்களுக்குள் அதாவது கேரள, கன்னட, ஆந்திர தமிழக, துளுவ மக்களுக்குள் வேற்றுமையையும், பிளவையும் உண்டாக்கக்கூடிய விதமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு தனியரசாகச் சுதந்தரத்துடன் வாழ வேண்டும். அதுபோலவே, ஆந்திரமும், கேரளமும், கன்னடமும், துளுவமும் தனித்தனியான சுதந்தரத்துடன் வாழ வேண்டும். ஆனால், "தமிழ் நாடு" என்று கூப்பாடு போடுகிறவர்கள் வடநாட்டுத் தொடர்பிலோ, A தொகுதியிலோ நிச்சயமாகச் சேர்ந்திருக்க விரும்பவில்லை என்று தீர்மானித்தால் அவர்களுக்கும் திராவிடர் கழகக்கொள்கைக்கும் வித்தியாசமே இல்லை. ஆனால், தமிழரசு வேண்டும் என்று (திராவிடர் கழகத்தைப் பின்பற்றிக்) கூறுபவர்கள், தமிழர் வாழ்வையே சிதைத்துச் சின்ன பின்னப் படுத்தி நாசம் செய்கிற ஆரியர்களைத் தமிழர்கள் என்று வாய் கூசாமல் கூறுவதுடன் அதே ஆரியர்களால் சிதைக்கப்பட்ட நமது இனத்தவர்களாகிய ஆந்திரர், கன்னடியர், கேரளர், துளுவர்

களைத் தமிழர்களுக்கு எதிரிகள் என்று தப்புப் பிரச்சாரம் செய்து இன்னும் நமது திராவிட இனத்தைப்பிளவு படுத்தவும் பலவீனப் படுத்தவும் துணிவதினால் நமக்கு நாமே கொள்ளி வைத்துக் கொள்வது போலல்லவா முடியும்!

ஆகவே, நாம் அனைவரும் திராவிடர்கள் என்ற இனப் பெயரில் ஒன்றுகூட வேண்டும். அதற்காக, மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய ஆதரவையும், செல்வாக்கையும், பிரச்சாரத்தையும் பயன்படுத்துவதின் மூலமே ஒற்றுமைப் பட்டாகவேண்டும். திராவிட நாட்டுப் பிரிவினையைத் திராவிடர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு அதை அடைவதற்குப் பாடுபடவேண்டும்.

"நமக்குள்ளே தகராறு இருந்தால் பேசித் தீர்த்துக் கொள்வோம். தமிழ் நாடுதான் வேண்டும் என்ற கிளர்ச்சிக்கு நாங்கள் எதிரிகள் அல்ல. தமிழ் நாடு என்றிருப்பதாலும் ஆட்சேபனை இல்லை. ஆனால், உண்மையான தமிழ் நாடாக இருக்கவேண்டும். நாங்கள் திராவிடநாடு கேட்கிற தத்துவத்திலேதான் தமிழ் நாடும் கேட்கப்படுகிறது என்று சொன்னால் உடனே ஐக்கியப்படுவோம் வாரீர்!

வடநாட்டானுக்கு இங்கேன் ஆதிக்கம்? வடமொழிக்கேன் ஆதிக்கம்? ஆரியத்துக்கேன் ஆணவம்? திராவிடர்களாகிய நம்மைச் சூத்திரன் என்று சொல்லும் சாத்திரங்களை எல்லாம் நெருப்பில் போட்டுக் கொளுத்துவோம் வாரீர்! வாரீர்!! வாரீர் தமிழரசுத் தோழர்களே!!!

---

**ஐக்கிய திராவிடம் அடைந்தே தீருவோம்**

## திராவிட நாட்டு மக்களுக்கு ஓர் நற்செய்தி

அன்புடையீர் !

எங்கள் மின்சாரத் தொழிற்சாலை மூலம் திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு விடும், நிலையமும் விஞ்ஞான வசதிகளோடு பிரகாசிப்பதற்குரிய எல்லாவிதமான கருவிகளுடன் தேர்ச்சிமிக்கத் தொழிலாளர்களைப் பெற்று குறித்த காலத்தில், குறைந்த விகிதத்தில் சிறந்த பலன் அடைவீர்களாக.

இங்ஙனம்

N. ஆறுமுகம், L.E.E.,

### புவன எலக்டிரிக் கம்பெனி

எலக்டிரிக் எஞ்சினியர்ஸ், கண்டிராக்டர்ஸ் & டிலர்ஸ்

புவனகிரி P. O. (via) சிதம்பரம் S. I. Ry.

எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் !!

எமது அடுத்த வெளியீடு

# திராவிடப் பூபதி

பூர்வீகத் திராவிடர்களின் வாழ்க்கை வரலாற்றிற்குப் புத்துயிரூட்டவரும் ஓர் அரிய பெரிய நாடக நூல்.

வெளியிடுவோர் :—

### திராவிட கலா நிலையம்

55, முக்தாருனிஸா பேகம் தெரு

மவுண்ட்ரோடு, சென்னை.

## உங்கள் நிலையங்களுக்கும் வீடுகளுக்கும் மின்சார வசதிகள் வேண்டுமா ?

- எங்களிடம் சகலவிதமான மின்சார வசதிகள் அளிக்கும் சாமான்கள் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

- எங்களிடமுள்ள தேர்ச்சிமிக்க மின்சாரத் தொழிலாளர்கள் திராவிட மக்களின் நம்பிக்கைக்கு முழுப் பாத்திரமானவர்கள்.

- திராவிட நாடு முழுவதும் மின்சார வசதிகள் மலிந்து இன்பமுறும் விதமாகச் செய்ய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள் !

**நேத்தாஜி எலக்டிரிக் ஸ்டோர்ஸ்,**

80, மேல வீதி,

சிதம்பரம். S. I. Ry.